விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு +IV

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 08 ஞாயிற்றுக்கிழமை (24.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ


# தமிழருக்கு அரசியல் தீர்வு இந்திய அரசு உதவும்!

## இந்தியப் பிரதமர் உறுதி

*(புதுடில்லி)*

*13 ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்க இந்திய அரசு உதவும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை முதன்முறையாகச் சந்தித்த போதே இது குறித்து நான் பேசியிருந்தேன். வட மாகாண முதலமைச்சரையும் விரைவில் அழைத்து நான் பேசுவேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.*

23ஆம் பக்கம் பார்க்க....



## நல்லூரானுக்கு இன்று தேர்



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். காலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 7 மணிக்கு முருகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். (எ-11)

## ஜெயாவை சந்திக்க கூட்டமைப்பு ஆவல்

(புதுடில்லி)

ஜெயலலிதாவைச் சந்திக்க காத்திருக்கிறோம் என தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் மக்களின்

23ஆம் பக்கம் பார்க்க....

## விக்னேஸ்வரனைச் சந்திக்க இந்தியப் பிரதமர் விருப்பம்!

(புதுடில்லி)

வடக்கு மாகாணசபை முதலமைச்சரான சி.வி.விக்னேஸ்வரனை விரைவில் சந்திக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விருப்பம் தெரிவித்துள்ளதாக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் புதுடில்லியில் நேற்று சனிக்கிழமை தெரிவித்துள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடி, புதுடில்லி வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களை நேற்று சனிக்கிழமை காலை சந்தித்தார்.

இலங்கையில் நிலவும் தற்போதைய சூழல் பற்றியும் அதிகாரப் பகிர்வு மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பில் தங்களின் மதிப்பீடுகளும் எதிர்பார்ப்புகளும் எவ்வாறு உள்ளன என்பது பற்றியும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவினர் பிரதமருக்கு விளக்கம் அளித்துள்ளதாக இந்திய பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சம்பந்தன், அரசியல் தீர்வு காண வேண்டிய விவகாரங்கள் குறித்து இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்ததோடு, இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் நலத

23ஆம் பக்கம் பார்க்க....



நல்லூர்க் கந்த சுவாமி ஆலய சப்பறத் திருவிழா நேற்று நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் சப்பறம் அசைந்து செல்வதைப் படத்தில் காணலாம்.

## முன்னாள் பிரதமருடன் கூட்டமைப்பு சந்திப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் அஜித்குமார் டோவல் ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பி.ப 3.30 மணியளவில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தூதுக் குழுவினர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க்கட்சிகளை பிரிக்க ஆளும் கட்சியினர் சதி?

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளைப் பிளவுபடுத்தி வெற்றி பெறும் சதித்திட்டத்தை ஆளுங்கட்சி முன்னெடுத்துள்ளது.

இதன்பிரகாரம் வரும் ஜனாதிபதித தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஒருவர் முன்னிறுத்தப்படுவதை தவிர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் ஆளுங்கட்சி தீவிரப்படுத்தியுள்ளது.

எதிர்க்கட்சியின் முக்கிய கட்சிகளுக்குள் பிளவுகளை ஏற்படுத்தல், பௌத்த மதகுருமாரின் துணையுடன் பௌத்த இனவாத வாக்குகளை

24ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்காவுக்கு அவசரமாக புறப்பட்டுச் சென்றார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவசரமாக அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளதாக அலரி மாளிகை தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திடீரென இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்காவில் வசிக்கும் ஜனாதிபதியின் சகோதரர் டட்லி ராஜபக்ஷ, அண்மையில் இலங்கை வந்திருந்ததுடன் அவருடன் சிறிய மருத்துவ பரிசோதனைக்காக ஜனாதிபதி நேற்றுக் காலை இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ள

24ஆம் பக்கம் பார்க்க....

## 6 ஆயிரம் ஏக்கர் தனியார் காணி இராணுவத்துக்காக சுவீகரிப்பு

### காணி அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய பாதுகாப்பை கவனத்தில் கொண்டு, பலாலி இராணுவ முகாமை பலப்படுத்துவதற்காக யாழ் மாவட்டத்தில் தனியாருக்கு சொந்தமான 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் சுவீகரித்துள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் கிழக்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள தனியார் காணிகளை அரசாங்கம் இவ்வாறு சுவீகரித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

. இந்த காணிகள் சுவீகரிக்கப்பட்டதால், வடக்கில் மக்களுக்கு எவ்விதமான அநீதியும் ஏற்படவில்லை. அரசாங்கம் சுவீகரித்துள்ள 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலத்தில் 220 ஏக்

23ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD
இலங்கையில் முதன் முறையாக மூன்று வருட உத்திரவாதத்துடன் கூடிய
HP,SAMSUNG, LENOVO, ASUS
கணினிகள் இப்பொழுது எம்மிடமிருந்து!
- வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட உத்திரவாதம்
இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(C-8267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகளிடம் பணம் பெற்ற தமிழக அரசியல்வாதிகள்

## சுப்பிரமணியம் சுவாமி தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தமிழீழ வைப்பகம் மூலம் கொடுப்பனவுகளை பெற்ற தமிழக அரசியல்வாதிகள் பற்றிய தகவல்களை விரைவில் வெளியிடப் போவதாக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஊடகங்களிடம் அவர் இதனை கூறியுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

தமிழீழ வைப்பகத்தின் மூலம் பணம் பெற்ற தமிழக அரசியல்வாதிகள் பற்றிய உறுதியான தகவல்கள் தன்னிடம் இருப்பதாகவும் சுவாமி கூறியுள்ளார்.

முல்லைத்தீவில் இருந்த விடுதலைப் புலிகளின் பதுங்குகுழி ஒன்றில் இருந்து, புலிகளின ஆதரவாளர்களுக்கு, புலிகள் வழங்கிய பணம் மற்றும் அது பற்றிய தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் தம்வசம் இருப்பதாக இலங்கை புலனாய்வுப் பிரிவினர் ஏற்கெனவே தெரிவித்திருந்தனர்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் மாநாட்டில் கலந்து கொண்ட சுப்பிரமணியம் சுவாமி தற்போது இவ்வாறான தகவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனதா கட்சியின் தலைவராக இருந்த சுப்பிரமணியம் சுவாமி, பல நாடாளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்ட போதும், அவரும் அவரது கட்சியினரும் படுதோல்விகளை சந்தித்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில், ஜனதா கட்சியை கலைத்து விட்டு சுப்பிரமணியம் சுவாமி பாரதிய ஜனதா கட்சியில் இணைந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# வடக்கு முதலமைச்சர் மீது பேமசிறிதேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக ரமன்ய நிக்காயவின் பீடாதிபதி நாபானே பேமசிறி தேரர் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் 21-ம் பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பிலான வரைவு திட்ட ஆவணமொன்றை, கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்தன, நாபானே பேமசிறி தேரரிடம் ஒப்படைத்து ஆசிபெற்றுக் கொண்டார்.

அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது பேமசிறி தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கினால் போஷிக்கப்பட்ட வடக்கு முதலமைச்சர் இன்று நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றார்.

நாட்டுக்கு எதிரான சவால்கள் குறித்து நிதானத்துடன் செயற்பட வேண்டும்.

உயர்தரம் மற்றும் சாதாரண தரம் ஆகிய பரீட்ச்சகளில் தோல்வியடைந்த மாணவ மாணவியருக்கு தொழில் புயிற்சி வழங்கப்பட வேண்டுமெனவும் நாபானே பேமசிறி தேரர் இதன்போது வலியுறுத்தியுள்ளார். (எ-11)

# புகையிரதம் மோதி ஒருவர் பலி




(கொழும்பு)

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கி சென்ற புகையிரத்துடன் நேற்று சனிக்கிழமை மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் பலியாகியுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மோட்டார் சைக்கிள், மதுரங்குளி கரிக்கட்டை பிரதேசத்தில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடக்க முற்பட்ட வேளையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன் போது, மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் 22 மீற்றர் தூரத்துக்கும் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் 174 மீற்றருக்கும் அப்பால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மதுரங்குளி விருதோடைக் கிராமத்தைச் சேர்ந்த முகம்மது நிஜாம் முகம்மது முபாஸ் (வயது 25) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்விபத்தில் உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக, புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815, 021 567 1532
valampurii@yahoo.com

வீடு, காணி
**விற்பனைக்கு**

பருத்தித்துறை 2ம் குறுக்குத்தெருவில்
நான்கு (4) பரப்புக் காணியும், சகல வசதிகள் கொண்ட நான்கு (4) அறைகள் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. இரண்டு நன்னீர்க் கிணறுகளும் உண்டு. ஒன்றாகவோ அல்லது இரு பகுதிகளாகவோ வாங்கலாம். (ஒரு துண்டு இரண்டு பரப்பு - இரு காணிகளுக்கும் ஒரே எல்லை) (C-8276)

விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்
**0777274793**

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-8262)
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392
WESTERN UNION MONEY TRANSFER

**நிரந்தர தொழில்வாய்ப்பு**

உங்கள் வயதிற்கேற்றவாறு நிரந்தர தொழில் மற்றும் தொழிலுக்கேற்ற சம்பளம் 15000/=,32000/= + 18-50 வயது ஆண்/பெண் 'கொழும்பை அண்மித்த' ஜேம்/டொபி/சொக்லெட்/பால்மா/கிளவுஸ்/PVC... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சிய பிரிவுகளுக்கு உடனடித் தேவை.
உணவு & பாதுகாப்பான தங்குமிட வசதிகள் குறைந்த விலைகளில் (நண்பர்கள் & குழுக்கள்& தம்பதியினர் ஒரே தொழிற்சாலையில்) (C-8273)
மேலதிக விபரங்கள் அறிய உடனடியாக அழையுங்கள்
தொடர்பு:- **077 - 6838231**

AIA THE REAL LIFE COMPANY
**AIA இன்சுரன்ஸ்**
வழங்கும்
தென் இந்திய விஜய் தொலைக்காட்சி கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும் மாபெரும் இசைநிகழ்ச்சி VSS 4
அனுமதி இலவசம்




Event Management | Ceylon Art Creation (K.T. பிரசாத்) (C-8220)
இம்மாதம் 26ம் திகதி மாலை 7 மணிக்கு
நல்லூர் கோவில் முன்றலில் உள்ள திறந்தவெளி அரங்கில்

**யாழ்ப்பாணத்தில்...**

**புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

யாழ்.கே.கே.எஸ் வீதி, தட்டாத்தெரு சந்தி
**ரஷ்மி புக் மார்ட் முன்றலில்**
ஆகஸ்ட் 28 வரை...




**அழகு தமிழில்...**
**ஆயிரக்கணக்கான புத்தகங்கள்...**
**வாங்கக் கூடிய விலையில்...**



சுஜாதா | மனுஷ்ய புத்ரன் | ஜெயமோகன் | தமிழச்சி | இராமகிருஷ்ணன் | லேனா தமிழ்வாணன்

இவர்களின் புத்தகங்களோடு...
உயிர்மை, விகடன், நியூசெஞ்சரி பதிப்பக வெளியீடுகளும் கிடைக்கும்.

**(இந்திய விலையில் 1.60 முதல் 3.15 மடங்கு விலைகளில்)**

**குறிப்பிட்ட சில மணிமேகலைப் பிரசுர வெளியீடுகள் 2.00 மடங்கு விலைகளில்**

**கனடா என்.குருபாதம் எழுதிய**
"மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள்!" - ரூ 1000/- 790/-
பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம் - ரூ 17000/- 8500/-
விகடன் இயர்புக் - ரூ 500/- 220/-

**இவற்றோடு இன்னும் ஏராளமான புத்தகங்கள். அரியசந்தர்ப்பம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.** (சி-8271)

கேசவன் புத்தக நிறுவனம் - ரஷ்மி புக் மார்ட் யாழ்ப்பாணம்
077 2228980

**தற்கால வாழ்வில் ஏற்படும் தேவைகளை ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய நாடுங்கள்**
**"வரம்" நிறுவனம்**

**குழந்தைகள் பராமரிப்பகம் - (KIDS CARE CENTRE)**
வேலைக்குச் செல்லும் பெற்றோர்களின் குழந்தைகளை பராமரிக்கவும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் நவீன வசதிகளுடன் கூடிய "குழந்தைகள் பராமரிப்பகம்"

**குருகுல கல்வியகம் - (KURUGULA EDUCATION CENTRE)**
இன்றைய இளைஞர் யுவதிகளின் நல்வாழ்விற்கு வழிகாட்டும் "குருகுல கல்வி" சார்ந்த யோகாசனம், உடற்பயிற்சி, தியான வகுப்புகளும் மற்றும் அவர்களின் கல்வி, தொழில் சார்ந்த ஆலோசனைகளும்.

**திருமண சேவை - (MATRIMONY SERVICES)**
தற்போதைய காலத்திற்கேற்ப திருமண சேவையும் திருமண ஒழுங்கமைப்பு நிகழ்வுகளும்

**குடும்ப நல ஆலோசனைகள் - (COUNSELLING)**
குடும்பம் மற்றும் தனிநபர் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு தகுந்த ஆலோசனைகளும் தீர்வுகளும்



மேலதிக தொடர்புகளுக்கு
**"வரம் நிறுவனம்"**
No. 118, G.P.S வீதி கள்ளியங்காடு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0718728738, 0777364939, 0754289926
Email:- info@hionejaffna.com, Web:- www.hionejaffna.com
(இது HIONE இன் சமூக நலன் சார் நிறுவனம்)



[7484]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தொடர்பாளராகப் பதவி உயர்வு காணும் உங்களை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றோம்



✦ஐந்தாண்டு காலம் திசைகாட்டியின் வளர்ச்சிக்கு அடிமட்டத்தொண்டனாக இருந்து அயராது உழைத்த உத்தமர் நீவிர் மட்டுமே

✦கடல் கடந்த நிலையிலுள்ள திசை காட்டியின் தலைமையின் Remote Controller போல செயலாற்றும் இயந்திர மனிதரும் நீர் தான்.

✦திசைகாட்டி சமூகமயப்பட்டு உறுதி நிலையடைய வலுவான அடித்தளமிட்டது உங்களது சிந்தனையே

✦வேக அம்புகளாக வந்தடிக்கும் விமர்சனங்கள் குறைநிறைகள் தாங்கும் காப்பரணும் தாங்களே

✦ தங்களை இப்பதவிக்கு நியமித்த எங்கள் திசைகாட்டிக் குழுமத்தலைவர் உயர் திரு.எஸ்.செல்வராசா அவர்களிற்கு இவ்விடத்தில் நன்றிகள் சொல்கின்றோம்.

✦காலம் கடந்து கிடைத்த கைமாறுதான் இது. இருப்பினும் இப்போது தானும் உங்கள் உழைப்பின் பெறுமதி எம் திசைகாட்டியின் அவுஸ்திரேலிய தேச 'வெள்ளைக் கொலர்' கல்விமான்களால் உணரப்பட்டமை எமக்கு ஆறுதலளிக்கின்றது.

✦சரி நீங்கள் செல்லுமிடமெல்லாம் வெற்றிப்பவனியே

திரு. வி.எஸ்.நிறஞ்சன்
(திசைகாட்டி நிர்மாணி, சட்டத்தரணி
திசைகாட்டிக் கொழும்புக்கிளை)
திரு.எஸ்.தீபன் (அவுஸ்திரேலியாக் கிளை)
செல்வி.வி.இந்துஜா
(பிரதம நிறைவேற்று அதிகாரி
அத்துணை பணியாளர்கள்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா தீர்வு விடயத்தில் ஒருபோதும் வற்புறுத்தாது

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு விஜயம் செய்தாலும் இந்தியா தீர்வு விடயத்தில் இலங்கை மீது எவ்விதமான அழுத்தங்களையும் வெளியிடாது. மாறாக வழமைபோன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறே கோரும் என்று அமைச்சரும் முன்னாள் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் திஸ்ஸ விதாரண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதுடன் நேற்றுமுன தினம் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

அதன்போது தமிழர் பிரச்சினையல் இந்தியா ஆக்கபூர்வமாக செயறபட வேண்டும் என வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மாவிடம் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகள இந்திய தரப்புடன் பேச்சு வார்த்தை நடத்தலாம். இதன்போது தீர்வு விவகாரம் குறித்து பேசப்படலாம். ஆனால் கூட்டமைப்பு பிரதிநிதிகளின் விஜயத்தின் அடிப்படையில் இலங்கை மீது இந்தியா எவ்விதமான அழுத்தங்களையும் பிரயோகிக்கும் என்று நாங்கள் கருத முடியாது.

காரணம் இலங்கை தீர்வு விவகாரமானது உள்நாட்டு விடயம் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கின்றமை தெளிவாகின்றது. ஆனால் வழமைபோன்று அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்தியா கோரிக்கை விடுக்கும். குறிப்பாக இந்தியா தொடர்ச்சியாகவே இந்தக் கோரிக்கையை விடுத்து வருகின்றது.

எனவே 13 ஆவது திருத்தச் சட்டத்தினை அமுல்படுத்துமாறு விடுக்கப்படும் கோரிக்கையை தவிர்த்து வேறு எந்த அழுத்தத்தையும் கூட்டமைப்பின் இந்திய விஜயம் ஏற்படுத்தாது. மேலும் அரசாங்கமும் கூட்டமைப்பும் பேச்சு நடத்த வேண்டும் என்றும் கோரி க்கை விடப்படலாம். அதனை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 80 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 150 | 200 |
| தக்காளி | 60 | 70 | 50 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 60 | 50 | 60 |
| கோவா | 70 | 70 | 70 | 80 |
| கரட் | 100 | 100 | 100 | 100 |
| பூசணி | 20 | 40 | 30 | 50 |
| புடோல் | 60 | 50 | 40 | 50 |
| வாழைக்காய் | 90 | 70 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 100 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 60 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 70 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 110 | 120 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 20 | 50 | 50 | 60 |
| போஞ்சி | 140 | 140 | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 25 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 30-40 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | — | — |

# ஜனாதிபதி முறைமையை எதிர்த்து நாடு தழுவிய ரீதியில் போராட்டம்

## சோபித தேரர் அறிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் போராட்டம் நடத்தப்பட உள்ளதாக மாதுலுவாவே சோபித தேரர் அறிவித்துள்ளார். எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் பாதக விளைவுகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



என்ன காரணத்திற்காக பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்பது குறித்தும் தெளிவுபடுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள், சிவில் அமைப்புக்களுடன் இணைந்து நாடு தழுவிய ரீதியில் தொடர் கூட்டங்கள் நடத்தப் படவுள்ளன.

நாட்டின் பிரதான நகரங்கள் அனைத்திலும் இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளதாகத் தெரவிக்கப்படுகிறது.

முதல் கூட்டம் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடத்தப்பட உள்ளது. (இ)

# இந்திய அரசை பயன்படுத்தி தமிழீழத்தை உருவாக்கத் திட்டம்

## தேசப்பற்றுள்ள இயக்கம் குற்றச்சாட்டு

இலங்கையில் இந்திய ஆதிக்கத்தை நிலைநிறுத்த மோடியின் அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பயன்படுத்தும் அதேவேளை, கூட்டமைப்பு இந்தியாவை பயன்படுத்தி இங்கு தமிழீழத்தை உருவாக்கும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கின்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் தொடர்பாக கருத்து தெரிவித்த போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் வசந்த பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் அரசியல் பொருளாதார இராணுவ ஆதிக்கத்தை இலங்கைக்குள் நிலைநாட்ட எமது நாட்டை அடிமைப்படுத்தும் முயற்சிகள் இன்று உத்வேகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திரா காந்தியின் ஆட்சி காலத்தில் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகளை வழங்கி இலங்கையில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு வித்திடப்பட்டது. அந்த முயற்சி இன்று தோல்வி கண்டு விட்டது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஈழக்கனவும் கலைந்து விட்டது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் மோடியின் அரசாங்கம் மீண்டும் தமது முயற்சியை ஆரம்பித்துள்ளது. கூட்டமைப்பை பயன்படுத்தி இலங்கையை அடிமைப்படுத்துவதற்காகவே அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மோடியின் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

அதேபோன்று இந்தியாவை பயன்படுத்தி இலங்கையில் தமிழீழத்தை உருவாக்கும் நிகழ்ச்சி நிரலை கூட்டமைப்பு முன்னெடுக்கின்றது.

இங்கு பிரிவினையை ஏற்படுத்தும் முயற்சி தோல்வியுற்றால் சமஷ்டி முறைமையை கொண்டு வந்து இந்தியாவின் தேவைக்கேற்ப எமது நாட்டை ஆட்டுவிப்பதே நோக்கமாகும்.

அதற்காகவே மரணித்துவிட்ட 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறும் அதிகாரத்தை பரவலாக்குமாறும் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

மரணித்து விட்ட 13க்கு உயிர் கொடுக்கும் முயற்சிகளை அரசாங்கம் கைவிட வேண்டும். இந்தியாவின் அழுத்தத்திற்கு அடிபணியாது அரசியல் காய்நகர்த்தல்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார். (எ-11)

## எபோலா பாதிப்பு விசாரணைக்கு உத்தரவு

எபோலா வைரஸ் பாதிப்பு குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் பெண் ஒருவர் மர்ம நோயினால் கொல்லப்பட்டிருந்தார்.

இந்த மரணம் தொடர்பில் விசாரணை நடத்தி உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவிற்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மரணம் தொடர்பில் பெண்ணின் குடும்ப உறுப்பினர்கள் வெளியிட்டு வரும் கருத்துக்கள் காரணமாக ஜனாதிபதி இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

ஏ.கே. சுவர்ணதிலக்கா என்ற பெண்ணே உயிரிழந்திருந்தார்.

இந்த மரணம் தொடர்பில் முழு அளவில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ-11)

# ஜனாதிபதியின் விஜயத்துக்கு எதிர்ப்பு வெளியிடப்படும்

## உருத்திரகுமாரன் தெரிவிப்பு

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அமெரிக்க விஜயத்திற்கு எதிர்ப்பு வெளியிடப்படும் என நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் செப்.மாதம் ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது. இந்த கூடட்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார். இலங்கை அரசாங்கத்தை தடை செய்யுமாறு உருத்திரகுமாரன, ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் கோரியிருந்தார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 25ம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமைக் காரியாலத்திற்கு எதிரில் இலங்கைக்கு எதிராக எதிர்ப்பு போராட்டமொன்று நடத்தப் பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். சாட்சியங்களை திரட்ட நேரடி அனுமதியை இலங்கை வழங்க மறுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# பொலிஸ் அதிகாரங்களை வடக்கிற்கு வழங்க முடியாது

## திவயின தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கிற்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாணசபைக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கக் கூடிய சூழ்நிலை கிடையாது எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இதனால் பொலிஸ் அதிகாரங்களை கோரி இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முயற்சி தோல்வியடைந்துள்ளது.

புதுடெல்லிக்குக் கூட பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என பாரதிய ஜனதா கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் சுப்ரமணியம் சுவாமி திவயின பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள வழங்கப்பட்டால் நாட்டின் பொலிஸ் திணைகளம் 11 துண்டுகளாக பிளவடையும் என இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் அறிவித்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர் புடை சூழ இரதத்திலே வரும் நல்லைக் குமரனுக்கு அரோகரா...

CAFE

சிவானந்தா கபே

SIVANANTHA CAFE

சுவையான சிற்றுண்டி வகைகள், குளிர்பானங்கள்,

உள்ளூர்,வெளியூர் பத்திரிகைகள்,சஞ்சிகைகள்.

பருத்தித்துறை வீதி
நல்லூர்,யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

95/32 B, முதலாம் ஒழுங்கை தேவாலய வீதி, வேப்பங்குளம், வவுனியாவில் வீட்டுடன் கூடிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:- 0776701854

(7479)

## வீடு விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி 15/6 A சிறாம்பியடி ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு.

தொடர்பு:- ப.சிவநாதன் (காளி கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி) (7470)

077 9763278, 0712117168

## வாடகைக்கு உண்டு

வேம்படி வீதி, யாழ்ப்பாணம் எனும் இடத்தில் மேல்மாடி இரண்டு அறைகள், சமையலறை, இணைந்த குளியலறை மற்றும் மலசல கூட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-021 222 6836,
(சி-8239) 077 8999716

## காணி விற்பனைக்கு

ஓட்டுமடம் முருகமூர்த்திறோட்
வயல்கரைலேனில்
3 1/2 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு

7480 தொடர்பு இல:- 0774434501

## சூடு பிடிக்கும் ஐஸ் வாளி

ஏ.எல்.எஸ் எனப்படும் நரம்பு தொடர்பான நோய் பற்றிய விழிப்புணர்வுக்காக உலகப் பிரபலங்கள் தலையில் குளிர்ந்த நீரை ஊற்றிக்கொள்ளும் ஐஸ்வாளி சவால் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகின்றது.

ஒருவர் தலையில் குளிர்நீரை ஊற்றிக்கொண்டு, இன்னொருவருக்கு சவால் விடுப்பார். சவால் விடுக்கப்பட்ட நபர் பதிலுக்கு தானும் குளிர் நீரை ஊற்றிக் கொண்டால் 10 டொலர்களை தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு நன்கொடையாகக் கொடுக்க முடியும்.

சவாலை ஏற்றுக் கொள்ளத் தவறினால் 100 டொலர்களை தொண்டு நிறுவனத்துக்கு செலுத்த வேண்டும் என்பது தான் இந்த ஐஸ் வாளி சவாலின் நிபந்தனை.

இதுவரை பலமில்லியன் நிதி இந்த வழியில் சேர்க்கப்பட்டுள்ளது.

இதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், உலக செல்வந்தர்களில் ஒருவரான பில் கிளிண்டன், பேஸ்புக் இணையதளத்தின் உரிமையாளர் மார்க்ஸக்கர்பர்க் உள்ளிட்ட பிரபலங்கள் இந்த சவாலில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)

## தொழில் வாய்ப்பு

தரம் 06 முதல் A/L வரை கல்வி கற்ற.அற்ற தொழில் வாய்ப்புக்கள் இல்லாதிருக்கும் 17-50 வயது ஆண்/பெண் இருபாலாருக்கும் எம்மிடம் உடனடி வேலை வாய்ப்பு கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள ஜேம்/கோடியல்/பிஸ்கட்/டொபி/யோகட்/PVC/பால்மா/பொலித்தீன்/காமென்ட் போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி/ லேபல்/ பொதியிடல் போன்ற பிரிவுகளுக்கு ஆட்கள் தேவை

சம்பளம் (தம்பதியினர் குழுக்கள் நண்பர்கள் ஒரே தொழிற்சாலைகளில்)

18000/= 25000/= 38000/=

வருகை தரும் நாளிலே வேலை பெறலாம்.

உறுதி பாதுகாப்பான தங்குமிடம் சகாய விலைகளில்

C-8274

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு -0775561883

## அழகுக்கலைப்பயிற்சி

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு விசேட கட்டணக்கழிவில்.........

- டிப்ளோமா அழகுக்கலைப்பயிற்சி மற்றும் கேக் ஐசிங் பயிற்சி 10%தொடக்கம் 30% கட்டணக்கழிவிலும்
- துரித 1 மாத கால அழகுக்கலைப்பயிற்சி 510/= பதிவுக்கட்டணத்துடன் நிபந்தனைக்கு அமைவாக இலவசமாகவும் ஆரம்பமாகவுள்ளன.

அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சேர விரும்புவோர் 27.08.2014 அன்று 10.00 மணிக்கு அறிமுக வகுப்பில் கலந்து மேலதிக விபரங்களை பெற்று இணைந்து கொள்ளவும்

குறிப்பு:- அழகுக்கலைப்பயிற்சி,கேக் ஐசிங் பயிற்சி வகுப்புக்கள் ஒவ்வொரு மாதமும் புதிய பிரிவுகள் ஆரம்பம். வகுப்புக்களில் தனியாகவும் குழுவாகவும் இணைந்து கொள்ளலாம். குழுவாக இணைந்து கொள்பவர்களுக்கு மேலும் விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்.

ஒறிபிளேம்

(7478)

616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில்)

தொடர்புகளுக்கு - 0772288243 0214546026

3,6 மற்றும் 12 மாததவணை காலப்பகுதியில் உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்

ரூபா.5மில்லியன்வரை பெற்றுக்கொள்ள முடியும்

நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்

ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.13,990 மட்டுமே

SINGER FINANCE நாடுங்கள்

உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| தனு | 077 9 357 124 |
| சுஜந்தன் | 077 7 391 449 |
| தர்ஷன் | 077 7 009 666 |
| கலைதேவன் | 077 3 675 022 |
| சுதன் | 077 3 550 018 |

(8270)

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

## இன்றைய இராசி பலன்

24.08.2014
(ஆவணி 08, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தசி மாலை 6.17 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 4.41 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இரண்டாம் ஆவணி ஞாயிறு
நல்லூர் கந்தன் தேர்

வளவன்

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், தொலைபேசிச் செய்திகள் மகிழ்ச்சி தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** மாமன்,மைத்துநர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும்.

**கடகம்** வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**துலாம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பார்த்த தன வரவுகள் வந்துசேரும்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, பிதா இன்பமுண்டு, எதிர்பார்த்த வருமானங்கள் வந்து சேரலாம்.

**தனுசு** திட்டமிட்ட பணிகளில் சிறு தடை தாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் நினைத்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**மகரம்** சொந்த பந்தங்களின் வருகையுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பேச்சில் கனிவு பிறக்கும், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள்.

**கும்பம்** உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, சுவாரஸ்யமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.

வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com



## காதல் திருமணத்திற்கும் நிச்சயிக்கப்பட்ட திருமணத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

**ரி.தனுஷ், உருத்திரபுரம்**

வியாசர்,

**ஆண்களைவிட பெண்களால் எப்படி நன்றாக படிக்க முடிகிறது?**

எதை நீ அதிகம் சொல்கிறாயோ, நினைக்கிறாயோ, செயற்படுத்துகிறாயோ அதுவாகவே நீ மாறிவிடுகிறாய். அதுதான் ஆண் இனம் அதிகம் சொல்லும், நினைக்கும் வார்த்தை. பெண்புத்தி பின்புத்தி. இப்போது புரிகிறதா?

---

**வி.தவதுரன், அல்வாய்**

வியாசர் ஐயா!

**மஹேலவின் ரெஸ்ட் வெற்றிடத்தை நிரப்பக் கூடிய வீரர் தற்போது இலங்கை அணியில் இருக்கின்றார்களா?**

முத்தையா முரளிதரனின் ஓய்வின்பின் எதிரணியை அச்சுறுத்தும் வகையில் பந்து வீச ரங்கன கேரத் இருக்கிறார். இலங்கை அணியின் துடுப்பாட்டத்தின் தூண் என வர்ணிக்கப்படும் மஹேலவின் இடத்தை நிரப்ப யாராலும் முடியாது. இது இலங்கை அணிக்கு ஆரோக்கியமானது அல்ல.

---

**சித்தாத், சுழிபுரம்**

Mr.வியா!

**நீங்கள் அதிகம் பயந்தது யாரைப்பார்த்து?**

கடவுளை விட அதிகம் பயந்தது, பயப்படுவது என் மனச்சாட்சிக்குத்தான்.

---

**சு.ஜெயரூபன், பருத்தித்துறை**

அன்பின் வியாசரே!

**காதல் திருமணத்திற்கும் நிச்சயிக்கப்பட்ட திருமணத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன?**

ஒருவர் நண்பனின் திருமணத்திற்கு நாய்க்குட்டி ஒன்றை பரிசாய்க் கொடுத்தார். சிறிதுகாலம் கழிந்ததும் நண்பரைச் சந்தித்து வாழ்க்கை எப்படிப்போகிறது என கேட்கிறார். சிறிய மாற்றங்களுடன் போகிறது என நண்பர் கூறினார். என்ன மாற்றம் என நண்பர் கேட்க, முன் நீ கொடுத்த நாய் என்னைப்பார்த்து குரைக்கும் என் மனைவி பேப்பரை கொண்டு வந்து தருவாள். இப்போது அதே நாய் எனக்கு பேப்பர் கொண்டு வந்து தருகிறது. என் மனைவி என்னைப் பார்த்து குரைக்கிறாள். அவ்வளவுதான் என்றார்.

***மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம***

---

**வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி**

**கனவுகளுக்கு பலன் உண்டா?**

சில கனவுகளுக்கு படுக்கையிலேயே பலன்... கிடைத்துவிடும். (காலையிலேயே கடன்காரன் வாசலில் வந்து நிற்பதைத்தான் சொன்னேன்)

---

**சுபா, கிளிநொச்சி**

**சூரியன் இல்லை என்றால் இந்த உலகம் எப்படி இருக்கும்?**

சரியான தலைவன் இல்லாது தவிக்கும் தமிழ் இனத்தைப் போல இருக்கும்.

## சூர்யாவின் அஞ்சான் படம் எப்படி?

## அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் பற்றி ஏதாவதொரு சுவாரஸ்யமான கதை சொல்லுங்களேன்?

**டிலக்சனா, வவுனியா**

Hi. Viya Bro.2

**அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் பற்றி ஏதாவதொரு சுவாரஸ்யமான கதை சொல்லுங்களேன?**

ஒருமுறை பாராளுமன்றத்தில் ஆபிரகாம்லிங்கன் உரையாற்றும்போது குறுக்கிட்ட வெள்ளையர் ஒருவர் உமது முன்னைய காலத்தை நீர் மறந்து விட்டீரா. உமது அப்பா தைத்துக் கொடுத்த சப்பாத்தைத்தான் நான் இப்போது போட்டிருக்கிறேன் என கிண்டலாகக் கூறினார்.

பதற்றப்படாத லிங்கன் எனது தந்தை ஒரு நல்ல உழைப்பாளி. அவர் இறந்து எவ்வளவு வருடங்கள் கழிந்தும் இப்போதும் அவர் தைத்த சப்பாத்து பாவிக்கிறதே. ஒரு நல்ல உழைப்பாளிக்கு மகனாகப் பிறந்ததையிட்டு நான் பெருமையடைகிறேன் எனக் கூறி பெருமையடைந்தார் ஆபிரகாம்லிங்கன்.

***மகன் தந்தைக் காற்றும் உதவி, இவன் தந்தை என்நோற்றான் கொல் எனுஞ்சொல்***

---

**எஸ்.சிவறீபன், புன்னாலைக்கட்டுவன்**


அன்பின் வியாசரே!

**சூர்யாவின் அஞ்சான் படம் வெற்றியா? தோல்வியா? படம் எப்படி?**

பாட்ஷா, தளபதிபோன்ற அக்ஷன்படங்களில்இருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்த கலவையினை மிக்சியில் போட்டு அடித்து அஞ்சான் எனும் மசால் தோசையாக ஊத்தியிருக்கிறார் இயக்குநர். ஏற்கனவே அரைச்சமா என்பதை புரிந்து கொள்ளாமல் ரசிகர்கள் சாப்பிட்டால் அஞ்சான் அஞ்சான்.

# நிரந்தர தீர்வு காண தடையாக அமையும்

## த.தே.கூ.இந்திய பயணம் குறித்து அமைச்சர் வாசு



இனப் பிரச்சினை நிரந்தரத் தீர்வு காண வருவதற்கு கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தடையாக அமைந்துவிடும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் டில்லியுடன் ஆலோசனை செய்வதில் எந்தவிதமான தவறும் கிடையாது. மாறாக இந்தியாவுடன் நேரடியாகப் பேசமுனைந்திருப்பது அரசாங்கத்தை இரண்டாம் தரத்திற்கு உள்ளாக்குவதுடன் பின்கதவால் செல்லும் செயற்பாடு இது எனக் குறிப்பிட்டுள்ள தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இலங்கைக்கு எதிராக டில்லி ஒரு போதும் செயற்படாது என நம்பிக்கை வெளியிட்டார்.

அதேவேளை அண்மையில் பாராளுமன்றத்தில்விசேட உரையை யாற்றியிருந்த பேராசிரியர் ரொஹான் குணரட்ன வெளிட்ட கருத்துக்கள் நல்லிணக்கத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருககும் நாட்டிற்கு அசிட் போன்றவை என அமைச்சர் கடுமையான விசனத்தை வெளியிட்டதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்றத்திற்கு அனுமதிக்க முடியாது என்றால் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) எவ்வாறு அனுமதிக்கமுடியும் என்றும் கேள்வியெழுப்பினார்.

தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சில் பிரதியமைச்சர் பி.திகாம்பரத்தின் அறிமுக நிகழ்வின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் மற்றும் பாராளுமன்றத்தில் பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான சர்வ தேச நிபுணத்துவ பேராசிரியர் ரொஹான் குணரட்ன வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கான தேசிய தீர்வு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முதலில் அரசாங்கத்தரப்புடனேயே பேசியிருக்கவேண்டும். அவ்வாறு பேசப்படும்போது அரசாங்கம், கூட்டமைப்பு சில விடயங்களை ஏற்றுக்கொள்ளாத நிலைமைகள் ஏற்படலாம். அவ்வாறான நிலைமையின் போது இருதரப்பு பிரதிநிதிகள் புதுடில்லி சென்றோ அல்லது அவர்களை இங்கு வரவழைத்தோ கலந்தாராய மேற் கொள்ள முடியும். அதன் மூலம் அதிகளவிலான விடை காண முடியாத விடயங்களுக்கு தீர்வுகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மாறாக கூட்டமைப்பினர் நேரடியாக டில்லியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதானது அரசாங்கத்தை இரண்டாம் தரப்பாக கருதுவதற்கு வழிவகுப்பதுடன் பின்கதவால் செல்வதற்கு ஒப்பானது. அவ்வாறு சென்று பேச்சுவார்த்தை நடத்தினாலும் ஒரு நாடு என்ற அடிப்படையில் டில்லி இலங்கை விடயங்களில் தலையிடாது. அவ்வாறு தலையிடவும் முடியாது. டில்லியின் ஆலோசனையை பெறுவதில் தவறில்லை. ஆனால் இவ்வாறான முறையைக் கையாள்வதானது பொருத்தமற்றதொன்றாகும். நல்லிணக்கம் தீர்வு தொடர்பாக விடயங்கள் கவனம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் கூட்டமைப்பு டில்லிக்குச் சென்று அரசு எதனையும் வழங்க மறுக்கின்றது. எமக்கு தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என்ற ரீதியான கருத்துகளை முன்வைப்பதானது இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெறுவதற்கு தடையாக அமைவதுடன் எதிர்கா லத்திலும் இப்பிரச்சினை நீடித்துச் செல்வே வழி சமைப்பதாய் அமைந்து விடலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# குற்றச்சாட்டை ஏற்கமுடியாது

## பிரதமர் ஜயட்ரன தெரிவிப்பு

பௌத்த மதத்தை பாதுகாக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் உண்மையில்லை என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பௌத்த மதத்தை பாதுகாக்கத் தவறியுள்ளதாக சில தரப்பினர் குற்றம் சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சில தரப்பினர் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் முரண்பாடுகளை வெடிக்கச் செய்யும் நோக்கில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மஹாவ இபலோகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான கிராம பகுதிகளைச் சேர்ந்த பௌத்த விஹாரைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (இ)

# நில அபகரிப்புகள் தொடர்பில் அதிகரிக்கும் முறைப்பாடுகள்

(கொழும்பு)

நிலஅபகரிப்பு, இந்திய வீட்டுத் திட்டத்தில் முறைகேடு, ஊழல் மோசடி, நிதிப் பிரச்சினை தொடர்பான முறைப்பாடுகள் வட பகுதியில் அதிகரித்து வருகின்றன என இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான இலவச சட்ட ஆலோனை நிலையத்தின் வடபிராந்திய இணைப்பாளர் ரவீந்திர டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, நில அபகரிப்பு, இந்திய வீட்டுத்திட்டத்தில் முறைகேடு, ஊழல் மோசடி, நிதி மோசடி என்பன தொடர்பான முறைப்பாடுகள் அதிகமாக கிடைத்துள்ளன.

குறிப்பாக ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரையிலான கடந்த 20 நாட்களில் இவ்வாறான 600 முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து ஜூலை மாதம வரை யிலான ஏழு மாத காலப்பகுதியில் இவை தொடர்பில் எமக்கு 929 முறைப்பாடுகள் கிடைத்தன. அவற்றில் நிலப் பிரச்சினை, நிர்வாகப் பிரச்சினை, ஆவணங்களை பெறுவது தொடர்பான பிரச்சினை என்பன தொடர்பில் கிடைக்கப்பெற்ற 318 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள சிக்கலுக்குரிய முறைப்பாடுகள் குறித்து தொடர்புடைய திணைக்களங்கள், அதிகாரிகள் மற்றும் நபர்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014




### அருளாசிச் செய்தி

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான முருகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துன்ப துயரங்களைப்போக்கும் நோக்கில் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் இடம் நல்லூர். இந்த நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று தேர்த்திருவிழா. தொல்லை வினை தீர்த்திடும் நல்லைக்கந்தன் இன்று அழகிய தேரிலே ஆரோகணிக்கின்றான். அழகன் முருகன் இன்று அலங்காரக் கந்தனாக தமது அருட்சக்திகளான வள்ளி தெய்வானையுடன் சித்திரத்தேரிலே சிங்காரப் பவனி வருகின்றான். இந்த நல்லூரிலே ஷண்முகப் பெருமான் தேரேறி உலாவருகின்ற அற்புதக் காட்சி ஆனந்த கோலாகலக் காட்சியாகும். கலியுகவரதன் கந்தன் கைதொழுவார்க்கருளும் இரதோற்சவ நன்னாளிலே வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் ஈசன் திருமகனாக ஆறுமுகங்களோடு அருட்காட்சி தரும் அழகு பார்க்கத் தெவிட்டாதது.

இன்றைய தேர்த்திருவிழா நன்னாளில் முருகன் அடியார்கள் அனைவருக்கும் அவனது திருவருள் கிடைக்க வேண்டுமென்று அருளாசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். இன்று எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று முருகன் திருவடி பணிந்து நல்லைக்குருமணிகளையும் வணங்கி உளமாரப் பிரார்த்தித்து ஆசி வழங்கி வாழ்த்துகின்றோம். எல்லாம் வல்ல நல்லைக்கந்தனின் நல்லருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்று வணங்கி நிற்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள், ஆதீன
குருமுதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.



**எத்தையோ கண்கள் காத்திருக்கின்றன**

சித்திரத் தேரில் எழுந்தருளி வரம் கொடு முருகா
பல்லாயிரம் பேர் மத்தியில்-நீ இன்று இரத பவனி வரும
காட்சியைக் காண எத்தனையோ கண்கள்
காத்திருக்கின்றன

*திருமதி விஜேந்திரன் டயானி*
*மல்லாகம் கோவில் வீதி.*

### நல்லைநகர் செவ்வேளின் தேர்விழாவைத் தரிசிப்போம்

நல்லைநகர்ச் செவ்வேளின் அற்புதக் கோயிலாக விளங்கும் கோயிலாக விளங்கும் முருகனின் மைல், அவன் திருக்கரத்தில் விளங்கும் வேல், அவன் கடைக்கண்ணின் நோக் கின் இயல்பு ஆகியவற்றைக் கண்டு வழிபாடு செய்து தியா னிக்க அருளாளர்கள் நம்மை அழைக்கின்றனர்.

இதனையே அருணகிரிநாத சுவாமிகளும் பெருத்த பாருனீர் நீவிர் வாருமே எனக்கூவி அழைக்கின்றார்.

நல்லைநகர் தந்த நாவலர் பெருமான் 1875ஆம் ஆண்டு நல்லூர் கந்தசுவாமி கோயில் பற்றி நூல் எழுதியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து நல்லைக்கந்தனின் பெரும்புகழை 60 இற்கு மேற்பட்ட பேரறிஞர்களும் வரலாறு செய்துள் ளார்கள். நல்லைக்கந்தனுக்கு வரலாறு எழுத நாம் யார்? அடியார்களின் வழிபாடுதான் வரலாறு ஆகும். இங்கு நடைபெறும் நித்திய பூசைச் சிறப்பு, மஹோற்சவ கால மூர்த்திகளின் பவனி வரும் சிறப்பு, மூர்த்தி அலங்காரச் சிறப்பு, தெய்வ ஊர்திகள் திருவீதியில் உலாவரும் காட்சி, அடியார்களின் வழிபாட்டுச் சிறப்பு, வெளிவீதியெங்கும் வெண்மணல் பரப்பி நீர் தெளித்த பசுமைக்காட்சி யாவும் புனிதத் தன்மையைக் கொடுக் கின்றது. புனிதத் தன்மை மிகுந்த இத்திருக்கோவில்தான் தெய்வீகத்தை நமக்குத் தருகின்றது.

நல்லைக்கந்தனுக்கு நடைபெறும் தேர்விழா மகோன்னதமானது. சமுதாயப் பெருவிழாவாக விளங்கும் தேர்விழா அழித்தலைக் குறிக்கின்றது. திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை அடியார்களுக்கு உணர்த்துகின்றது. மும்மலங்களை அழித்துக் காப்பாற்றும் விழாவில் அடியார்கள் நடுவில் இருக்கும் நமக்கும் நல்லைக்கந்தன் திருவருள் மழை பொழிய பிரார்த்திப்போமாக.

கா.சிவபாலன்

## நல்லூரான் வடம் பிடித்தால் வல்வினைகள் அகன்றிடுமே

நல்லைக்கந்தன் மஹோற்சவம் ஆரம்பித்து விட்டால் எங்கும் பக்தி வெள்ளம் கரை புரண்டோடும், மங்களம் பொங்கும், சிந்தையெல்லாம் தெய்வீகம் மணக்கும், நெற்றியெல்லாம் திருநீறு மணக்கும், திரு வீதியெல்லாம் கர்ப்பூரம் மணக்கும், அடியவர்கள் உள்ளமெல்லாம் பக்தி பெருக்கெடுக்கும்.

மேலான உற்சவமென்றும் மகோன்னதமான உற்சவமென்றும் போற்றப்படுகின்ற மஹோற்சவத்தின் மணி மகுடமாகத் திகழ்வது தேர்த்திருவிழா. யாழ்ப்பாணத்தின் தேசிய திருவிழா என்று கூறப்படும் இத்தெய்வீகப் பெருவிழாவில் வள்ளி தெய்வயானை சமேதராக முருகப்பெருமான் சித்திரத்தேரேறி பக்தர்களை நாடி அருள்புரிய வருகிறார். தேர்த்திருவிழாவில் கூடநேரந்தவறாமை சிறப்பம்சமாகும். முருகப்பெருமான் பிரபஞ்சமாகிய தேரின் உள்ளேயும் வெளியேயும் நின்று அருள் மழை பொழியும் திருவருட் காட்சியை நாமெல்லாம் கண்குளிர மனங்குளிரக்காணும் நாள் இன்றைய முருகப்பெருமானின் தேர்த்திருவிழா நாளாகும்.

தேரின் பாகங்கள் பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் பீடம்இருதயத்தையும் குறிக்கும். தேரின் பீடத்தில் முருகப்பெருமான் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது. எங்களது உதட்டில் முருகன் திருநாமத்தை நினைக்கின்றபோது உள்ளமாகிய பீடத்தில் முருகப் பெருமான் வீற்றிருக்க எங்கள் வாழ்க்கையாகிய தேர் சிறப்பாக ஓடும்.

அசையும் கோயிலாகவும் நடமாடும் மரச்சிற்பமாகவும் உயர்ந்த கலைச்செல்வமாக விளங்கும் திருத்தேரில் எழுந்தருளுகின்ற நல்லைக்கந்தனை கந்தா சரணம், கடம்பா சரணம், முருகா சரணம் என்று முருக நாமங்களைப் பதிக்கும் போது உடம்பினால் செய்யும் செயல்களும் உரையினால் சொல்லும் சொல்லும் உரம் பெறும், வளம் பெறும்.

நல்லைக்கந்தன் தேர்த்திருவிழாவின் போது மலைமலையாக குவிக்கப்பட்ட தேங்காய்கள் சிதற அடிக்கப்படுகின்றன. எமது துன்ப துயரங்களை சிதற வைப்பதையும் தேங்காயின் கடின ஓடு உடைந்து வெண்மையான உட்பகுதி தெரியச்செய்து மல நீக்கத்தை உருவகப்படுத்துவதையும் தேர்த்திருவிழாவில் காணலாம்.

நல்லைக்கந்தனின் தேரின் கோபுரம் குவிந்து சென்று தேர்க்கலச முடிவில் வெள்ளிக்குடை தெரிகிறது. எமது மனம் ஒருமைப்பட்டு ஒருமித்த சிந்தனையுடன் அழகுத்தெய்வமாம் முருகப்பெருமானைத் தியானித்தால் அவனது அருட்குடை நிழல் நம்மை இன்னல்களில் இருந்து காக்கும்.

நல்லைக்கந்தன் திருத்தேர் வடம் பிடிப்பது என்பதே பெரும்பேறு ஆகும். அழகும் இளமையும் மணமும் தெய்வத்தன்மை நிரம்பிய ஆறு திருமுகங்களுடன் பன்னிரு திருக்கரங்களுடன் பொலிந்து விளங்குகிறது. அந்த ஈராறு கையழகனின்மிகச் சிறந்த நாமத்தை முருகா என உள்ளத்தினால் நினைத் துப் போற்றி திருத்தேர் வடம் பிடித்து இழுப்பவர்களுக்கு நிறைவான செல்வங்கள் கிடைக்கும், வியாதி அடைந்து துன்பப்பட மாட்டார்கள், ஒரு காலமும் துன்பப்படமாட்டார்கள், பரகதி அடைவார்கள். தேவியர் இருவருடனும் தேரேறி வரும் நல்லைக்குமரனின் அழகுக் காட்சியைக் கண்டு விட்டால் நம்மிடம் ஆழப் பதிந்து கிடக்கும் அகந்தைக் கிழங்கைத் தகர்த்தெறிந்து ஞானத்துக்கு இடம் தேடியவர்கள் ஆவோம்.

இதன் மூலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழமுடியும். ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பெரும் கரணங் கள் நான்கும் சிந்தையே ஆக நல்லைக் கந்தன் தேர்த் திருவிழாவைக் கண்குளிரக் கண்டு தரிசித்து நாட்டில் அமைதியும் சாந்தியும் நிலவிட எமது அசுர குணங்களைப் போக்கி சகல செல்வங்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக

சைவப்புலவர் சி.நந்தகுமார்,
உரும்பிராய்

### தேரேறி வந்து ஆறுமுகனே அருள்புரிவாய்

ஐந்து திருமுகங்கள், பதினைந்து திருக்கண்கள், பத்து திருக்கரங்கள், இரண்டு பொற்பாதகமலங்கள் என்னும் முப்பத்திரண்டு இலக்கணங்களையுடைய சிவபெருமானிலிருந்து ஆறுதிருமுகங்கள், பன்னிரண்டு திருக்கரங்கள், பன்னிரண்டு நேத்திரங்கள், இரண்டு திருத்தாள்கள் என்னும் முப்பத்திரண்டு இலக்கணங்களமைந்துள்ள சக்திமானாகிய சுப்பிரமணியக் கடவுள் தோன்றினார்.

பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞானா சக்தி, கிரியா சக்தி, பிரணவ சக்திகளும் சர்வஞ்ஞத்துவம், நித்திய திருப்தி, அனாதிபோதம், அலுப்தசக்தி, அநந்தசக்தி, சுவதந்திரம் என்னும் இறைவனுடைய சுத்தநுணங்களாலும் மகாசதாக்கியம் பொருந்திய கீழ்நோக்கிய பிரணவமுகமும் சிவசதாக்கியஞ் செறிந்த மேனோக்கிய ஈசானமுகமும் அமூர்த்த சதாக்கியஞ் செறிந்த மேற்கு நோக்கிய சத்தியோயாதமுகமும மூர்த்தி சதாக்கியஞ் செறிந்த வடக்கு நோக்கிய வாமதேவமுகமும் கர்த்திருசதாக்கியஞ் செறிந்த தெற்கு நோக்கிய அகோரமுகமும் கர்மசதாக்கியஞ் செறிந்த கிழக்கு நோக்கிய தற்புருடமுகமும் ஆகிய இறைவன் முகமாறும் இவருக்கு ஆறு திருமுகங்களாக அமைந்துள்ளன. இன்று ஆறுமுகப் பெருமான் தேரேறி திருவருள் நோக்கம் புரியும் தன்மை ஆணவமயமொடுங்கும் நாளாக அமைவதற்கேயாம் என்று எல்லோரும் உணர நல்லூர் கந்தன் அருள்புரிய வேண்டும் என நல்லாசி கூறுவதும் அவர்கள் திருவருளேயாகும்.

ஈழவூர் சைவப்புலவர்
சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம், JP


After A/L அங்கீகரிக்கப்பட்டதும் தரமானதும் முழுமையானதுமான கல்விக்கு

முன்னணி நிறுவனம்

DMI COMPUTER EDUCATION

கணினி டிப்ளோமா கற்கை நெறிகள்

- Diploma in Office Automation DOA
- Dip. in Pre-Press Desktop Publicating DTP
- Diploma in Pc Applications DPCA
- Adv. Dip. in Hardware & Networking ADHN
- Dip. in Video Production & Multimedia DVPM
- Dip.in Web Designing & Development DWD
- Dip. in Computerized Accounting DCA

• Auto CAD • JAVA • VBNET • C#
• PHP • Maya • 3ds Max • Tally • C, C++

DIPLOMA IN INFORMATION TECHNOLOGY

IT fundamentals, Office applications, Programming with .net and Java, Web Designing and Development with php, Hardware, Networking, Graphics and Animation, Project.

DiTEC

தகவல்தொழில்நுட்ப கல்விக்கு முழுமையான கற்கை நெறி

யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து

Spoken English
Veta Fluency Diploma (Duration: 3 Months)

A/L பரீட்சை எழுதியவர்கள், மாணவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் பேச விரும்புபவர்களுக்கானது



☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (TVEC Reg.No.P25/0056)
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

கணினி ஆங்கில கற்கை நெறிகளுக்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு I - 3/ 09 /2014 9.30 am
பிரிவு ii - 8/ 09/2014 9.30 am

25 / 9 முதல் முதலில் இணையும் 200 பேருக்கு Pendrive முற்றிலும் இலவசம் விரையுங்கள்

சர்வதேச, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, [illegible] வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) Tel. : 021-227 0775
சுன்னாகம் No.130, K.K.S. வீதி, (NSB வங்கி அருகில்) Tel. : 021-224 1970


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பு செப்.5 இல்

# வடமத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கொலை!

வடமத்திய மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உட்பட 29 பேரை குண்டு தாக்கி கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர், தனது குற்றத்தை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

இந்நிலையில், இவருக்கு எதிரான தீர்ப்பு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி வழங்கப்படும் என்று வடமேல் மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி நுனந்த குமார ரத்நாயக்க தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்தில் கேணல் பதவிநிலை வகித்தவரும் செங்கலடியைச் சேர்ந்தவருமான சண்முகநாதன் சுதாகரன் என்பவருக்கு எதிராகவே தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி, குண்டுத் தாக்குதலை நடத்தி ஜானக பெரேரா உட்பட 29 பேரை கொலை செய்தார் என்று இவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை, நேற்று இடம்பெற்ற நிலையிலேயே அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பிரசவத்தில் கின்னஸ் சாதனை!

முதல் இரண்டு பிரசவங்களின் போதும் இரட்டை சிசுக்களை பெற்ற பெண்ணொருவர் தனது மூன்றாவது பிரசவத்தில் மூன்று சிசுக்களை பிரசவித்த விநோத சம்பவம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு, மருதானையை சேர்ந்த பாத்திமா நிரோஷா என்ற 31 வயதுடைய பெண்ணே இவ்வாறு தனது மூன்றாவது பிரசவத்தின் போது 3 ஆண் சிசுக்களை பெற்றுள்ளார்.

இப்பெண் ஏற்கனவே முதலாவது பிரசவத்தில் இரட்டை சிசுக்களை பிரசவித்துள்ளதுடன் இரண்டாவது பிரசவத்திலும் இரட்டை சிசுக்களை பெற்றார்.

இந்நிலையிலே மூன்றாவது பிரசவத்திலும் அவர் மூன்று சிசுக்களை பிரசவித்துள்ளார். சொய்சா பிரசவ வைத்தியசாலையிலே இவருக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

இவரது முதல் இரண்டு பிள்ளைகளுக்கும் தற்போது 15 வயதாகிறது.

சாஹிர் அப்துல் கரீம், பாத்திமா நிரோஷா தம்பதிக்கு தற்போது 7 ஆண் பிள்ளைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பாத்திமா நிரோஷா உலகிலேயே மூன்று பிரசவங்களின் போதும் அதிகமான எண்ணிக்கையில் சிசுக்களை பெற்றவர் என்று கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடிக்கக்கூடும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

தற்போது, தாயும் சிசுக்களும் நலமாக உள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

# வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சும் இலங்கை அரசினது நடவடிக்கை

முன்னாள் மத்திய அமைச்சர்

இலங்கை கடற்படை மீனவர்களின் 63 படகுகளை சிறைபிடித்து நீண்ட நாட்கள் ஆகியும் விடுவிக்கவில்லை.

இந்த நிலையில் இலங்கை அமைச்சர் ஒருவர் படகுகளை ஒப்படைக்க முடியாது என கூறியுள்ளமை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல உள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் மத்திய அமைச்சர் ஜீ.கே.வாசன்.

நேற்றுமுன்தினம் தமிழகம் ஈரோட்டுக்குச் சென்றவேளை அங்கு மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் அவர் செய்தியாளர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மீனவர் பிரச்சினை தொடர்பாக எதிர்வரும் 29 ஆம் திகதி டில்லியில் மத்திய, மாநில அரசு அதிகாரிகளுடன் இலங்கை அதிகாரிகள் பேச்சு நடத்துகின்றனர். இதில் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர சுமுக தீர்வு காணவேண்டும். மத்தியில் ஆளும பா.ஜ.க. அரசின் தவறுகளை சுட்டிக் காட்டவும், தட்டி கேட்கவும், கண்டிக்கவும் நாட்டில் எதிர்க்கட்சி வேண்டும். ஆனால் பா.ஜ.க. தங்களின் செயலகளை தட்டி கேட்க எதிர்க்கட்சி இருக்க கூடாது என திட்டமிட்டு செயற்படுகிறது. இது ஜனநாயகத்துக்கு எதிரான செயல். இதனை ஒருபோதும் இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பொழுதுபோக்கு பயணங்களுக்கு அமைச்சர்கள் லண்டனிடம் உதவி

ரவி எம்.பி. குற்றச்சாட்டு

அமைச்சர்கள் இருவரின் பொழுது போக்குப் பயணங்களுக்கு லண்டன் தூதரகம் பணம் செலவிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டனுக்கான இலங்கைத் தூதரகத்தினால் இரண்டு அமைச்சர்களின் பொழுது போக்குப் பயணச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விளக்கமளிக்க வேண்டுமென ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சு மறுத்த போதிலும் அரசாங்கத்தின் பணம் அமைச்சர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிதது்ள்ளார்.

தேவை ஏற்பட்டால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்த தகவல்களை அம்பலப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (இ)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளம் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசை யரங்குதின மும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்றைய தினம் இடம்பெறவுள்ள இசையரங்கத்தில் பாடல் ஏ.கே.கருணாகரன், வயலின் கே.குகபரன், மிருதங்கம் பிரம்ம ஸ்ரீ சுவா மிநாத சர்மா, கெஞ்சிரா பிரம்மஸ்ரீ எஸ்.சிவசுந்தர சர்மா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

## ஆன்மீக அருளுரை

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றையதினம் நம்மால் முடியும் எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

## இசைப்பேருரை

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இடம் பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப் பேருரை தினமும் மாலை 6.30 மணி தொட க்கம் இரவு 7.30 மணி வரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ. வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின் றது. இன்றைய தினம் இராம, இராவண யுத்தம் எனும் தலைப்பிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

## இசை நிகழ்ச்சி

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப் படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத் தில் இடம் பெற்று வருகின்றது. இன் றைய நிகழ்வில் ஹம்சத்வனி சோம சுந்தர குருக்கள் வழங்கவுள்ள மதுர கானம் இடம்பெறவுள்ளது.

## தெய்வீக கலையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் தெய்வீக கலையரங்கு வரிசையில் இன்றைய தினம் 9 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை நல்லை ஆதீனத்தில் ஆ.குமாரசாமி வழங்குவுள்ள பக்தி பாடல்கள் மற்றும் பண்ணிசை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.


## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்றுவருகின்றது.

இன்றைய தினம் ஆ. சிவநாதன் வழங்கவுள்ள உதித்தனன் உலகம் உய்ய எனும் தலைப்பிலான சொற்பொழிவும் அராலி கலைவாணி இந்து சமய அபிவிருத்திச் சங்க அற நெறிப் பாடசாலை, கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சிறுப்பிட்டி அண்ண மார் அம்பாள் அறநெறிப்பாட சாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வு களும் இடம்பெற வுள்ளன.

இன்றைய தேர் உற்சவ விசேட காலை நிகழ்வுகளாக அழகேசன் அமிர்த சிந்துஜன் பரமேஸ்வரன் கௌரீசன் ஆகியோரின் பண் ணிசை கச்சேரியும் திருமதி புஸ் பமலர் யோக நாத னின் மாண வர்களது இன்னிசை கச்சேரியும் பொன்னாலை வரதராஜ கோவில் கண்ணன் பஜனை குழுவினரின் பஜனை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இ

# நல்லூரான் திருவடிக்கு இன்று தேர்த்திருவிழா



## எமக்கு ஒரு தெய்வம் அவனே நல்லூர்க்கந்தன்

அண்ட சராசரங்களை ஆளும் அருட்கடல்,
ஆன்ம விடுதலை தரும் ஈசன் அவன்,
இம்மை வாழ்வை வளப்படுத்தும் கடம்பன் அவன்,
உன்பாதம் சரண்புகுந்தோம் நலம் பெற்றோம்,
ஊழ்வினை அறுத்து தேர்வலம் வரும் ஈசா
எப்போதும் எமக்கு அரண் நின் நீ தானே
ஏழ் பிறப்பும் எம் ஆன்மா அழகன் உன்னிடமே
ஒப்பில்லாப் பெருவாழ்வு தரும் ஆன்ம ஒளியே,
ஓர் இமைபொழுதும் உம்மடி நாம் மறவோம்.

காரை.எஸ்.கே.ஜனகன், யா/அனலைதீவு சதாசிவ ம.வி. ஆசிரியர்.

## அற்புதம் காட்டும் நல்லூரானே

செல்வமும் பக்தியும் சேர்ந்திடும் நல்லையில்
தேரேறி வலம் வரும் திருக்குமரா
வல்லவா கொடுமையால் பாலரும் பெண்களும்
சிந்திடும் கண்ணீரை துடைப்பீரோ
இல்லமெலாம் நின் திருவடி சிந்தையில்
ஏற்றியே நின்றனர் துயர்களைவாய்
தொல்லைகள் அகற்றிட வேலதை வீசுவாய்
அற்புதம் காட்டும் நல்லூரானே.

திருமதி.மகேந்திரா இளங்கோ, வதிரி.

## வித்தகக்குமரன் சித்திரத் தேரினில் வருகிறான்

நல்லையம்பதி வீதியிலே கந்தனின் தேரோட்டம்
நாடியே பக்தர்கள் தேடியே வந்தனர்
வேல் கொடுத்தாள் அன்னை பார்வதி அன்னையே
வெற்றிகொள்வடிவேலா என வாழ்த்தியே
துதி செய்து வேலதனைத் தாங்கிய வடிவேலன்
கதியற்று இருந்த தேவர்களைக் காத்திட
மதிகெட்ட கொடுஞ்சூரனை அழித்து வெற்றிச்சிரிப்புடன்
வித்தகக்குமாரன் சித்திரத்தேரினில் வருகிறான்.

சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம், நாயன்மார்கட்டு.

## தேரில் வருகிறான் தேன் தமிழ்த் தலைவன்

தேரில் வருகிறான் தேன்தமிழ்த்தலைவன்
நேரில் வருகிறான் கையில் வேலுடன்
இச்சை கிரிகை இருவர் சூழ
இனிய தமிழின் உருக்கொண்டு
இனியும் துன்பம் இல்லை என்று
இனிக்கும் செய்தி சொல்லி வருகிறான்
தேரில் வருகிறான் நேரில் வருகிறான்.

ஈஸ்வரி, பிறவுண் வீதி.

## நல்லைக் கந்தன் தேரேறி வருகின்றான்

நல்லைநகர் வீதியிலே கந்தன் தேரேறி வருகின்றான்
நலங்கள் பல அருளிடவே தேரேறி வருகின்றான்
அல்லல் தீர்த்து எமைக் காக்க தேரேறி வருகின்றான்
நல்லதொரு தீர்வைத்தர தேரேறி வருகின்றான்
நல்லைநகர் வீதியிலே கந்தன் தேரேறி வருகின்றான்

திருமதி.செ.பாக்கியநாதன்.

## நல்லைக் கந்தன் நனிவெண்பா


நாயாய்ப் பிறந்திடினும் நல்லை நகர்க்குமரனுனை
வாயால் கவிபாட வரமருள்வாய் - பேயேனின்
பிதற்றுகின்ற வார்த்தைக்கும் பேறுவரச் செய்தருளி
இதமாகக் காப்பாய் இனிது.

கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

# 17.08.2014-16.09.2014



## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்**

**எண்ணம் நல்லதானால் எல்லாம் நல்லதாகும் என்று சொல்லும் தனுசு இராசி நேயர்களே! விரயங்கள் அதிகரிக்கும் நேரம்!**

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் குரு சுக்ரனுடன் இணைந்து அஷ்டமத்தில் சஞ்சரிக்கின்றார். சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. எனவே கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டிய நேரமாகும். விரயங்கள் கூடுதலாக இருக்கும் இந்த நேரத்தில் வீடு மற்றும் இடங்கள் வாங்குவது சம்பந்தமாக முடிவெடுப்பது நல்லது. இல்லையேல் விலை உயர்ந்த பொருட்களை வீட்டிற்குத் தேவையான விதத்தில் வாங்குவதும் நல்லது.

10 இல் ராகு இருப்பதால் தொழில் வளம சிறப்பாக இருக்கும் என்றாலும், மனநிம்மதி கொஞ்சம் குறைவாகவே இருக்கும். அதே நேரத்தில் புதனும், சூரியனும் 9இல் இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார்கள். எனவே மாதத்தின் முதல் வாரத்தில் அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். வி.ஐ.பிக்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள்.

பஞ்சம ஸ்தானத்தில் சந்திரன் சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் கொஞ்சம் விரயங்கள் ஏற்படலாம். அவர்களின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளுக்கும் செலவிடும் சூழ்நிலை உண்டு. அல்லது கடல்தாண்டி படிக்க வைக்கும் வாய்ப்புகளுக்கும் செலவிட நேரிடும். கல்யாணக் கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அஷ்டமத்தில் குரு சஞ்சரித்தாலும் கூட இரண்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களைப் பார்ப்பதால் பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகல குருவின் பார்வை கைகொடுக்கும். உறவினர்கள் பகைமாறி உற்சாகத்தோடு வந்திணைந்து பணிபுரிவர். அதே நேரத்தில் உச்சம பெற்ற சனி உங்கள் ராசியயைப் பார்க்கிறார். எனவே, ஆரோக்கியத் தொல்லைகளை அடிக்கடி சந்திக்க நேரிடும். ஒரு நேரத்தில் இருந்த ஆரோக்கியம் மற்றொரு நேரத்தில் இல்லையே என்று கவலைப்படுவீர்கள். மாற்று மருத்துவத்தின் மூலம் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வது நல்லது. நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள், கை, கால் வலி போன்றவைகள் ஏற்பட்டு அகலும்.

சனி, செவ்வாய் சேர்க்கைக்கு பரிகாரமாக சிறப்புப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து அங்காரகனையும், முருகப்பெருமானையும் வழிபடுவதோடு, சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனி பகவானையும், அனுமனையும் வழிபடுவது நன்மை தரும். கேது சுகஸ்தானத்தில் இருப்பதால் சுகக் கேடுகள் வராமல், சொல்லைச் செயலாக்கிக் காட்ட ஆனைமுகப் பெருமானை வழிபடுங்கள். ஆவணி சதுர்த்தியன்று ஐங்கரனை வழிபட்டால் தேவை கள் பூர்த்தியாகும்.

**தொழில் வளம் பெருகும் நேரம்!**

ஆகஸ்ட் 26 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 10 ஆம் இடத்தில் புதன் உச்சம் பெறும் பொழுது முத்தான வாழ்க்கை மலரும். முறையான தொழில்கள் வாய்க்கும். பத்தோடு பதினோறாவது ஆளாக நீங்கள் இருக்காமல் முதல் நிலைக்கு வர எடுத்த முயற்சி வெற்றிபெறும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். மகிழ்ச்சிப் பயணங்கள் அதிகரிக்கும். பூமி வாங்குவது முதல் புதிய திட்டங்கள் தீட்டுவது வரை செயல்படுத்துவீர்கள்.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்!**

விரயாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிகும் நேரமாக செப்டம்பர் 1 ஆம் திகதி வருகிறது. அன்றைய தினம் தான் செவ்வாய் விருச்சிகத்தில் சஞ்சரிக்கப்போகிறார். பஞ்சம ஸ்தானாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் வாரிசுகளாலும் விரயங்கள் ஏற்படாலம். அவர்களை உங்கள் நேரடிக் கண்காணிப்பில் வைத்துக்கொள்வது நல்லது. பெண் குழந்தைகளின் திருமணப் பேச்சுக்களை நடத்துபவர்கள் இந்த நேரத்தில் வரும் வரன்களை விரைவாக பரிசீலித்து நல்ல வரனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வது நலலது. வாங்கிய சொத்துக்களை விற்கவும், விற்ற சொத்துக்களை வாங்குவதற்கும் உகந்த நேரமாக இந்த நேரம் இருக்கிறது. அரசியலில் இருப்பவர்களுக்கு மீண்டும் பழைய பொறுப்புகள் வந்து சேரலாம்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் முதல் தேதியன்று தேவகுருவான வியாழனுடன் இணைந்திருந்த அசுரகுருவான சுக்ரன் சிம்மத்தில் சஞ்சரிக்கப்போகிறார். பெற்றோர் வழியில் பிரச்சினைகள் உருவாகி மறையும். உத்தியோக மாற்றங்கள் ஒரு சிலருக்கு உருவாகலாம். அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடி வந்து சேரும். இம்மாதம் வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஆவணி சதுர்த்தியன்று ஆனைமுகப் பெருமானை வழிபட்டு அமைதியை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி, மாறிவரும் மாதமாகும். எனவே ஆகஸ்டு 30ஆம் திகதி வரை வளர்ச்சி மீது வளர்ச்சி ஏற்படும். செப்டம்பர் 1 ஆம் திகதி முதல் விரயங்கள் அதிகரிக்கும். ஏதேனும் புது முயற்சிகள் செய்தால், மாதத் தொடக்கம் நன்மையைத் தரும் விதத்தில் அமையலாம். செவ்வாய் பெயர்ச்சிக்குப் பின்னால் குடும்ப பிரச்சினைகள் கொஞ்சம், கொஞ்சமாக அதிகரிக்கலாம். எனவே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. கணவன் மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட அனுசரித்து செல்வது அவசியம். அதே நேரத்தில் சொத்துக்கள் வாங்கும் பொழுது, உங்கள் பெயரில் வாங்கலாம் என்ற எண்ணத்தை குடும்பப் பெரியவர்கள் வளர்த்துக் கொள்வர். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். பிள்ளைகள் வெளிநாடு செல்லும் வாய்ப்பால் பெருமை காண்பீர்கள். வேழமுகத்தான் வழிபாடு வெற்றியை வழங்கும்.

## விரயங்கள் அதிகரிக்கும் நேரம்!

## சிவல்புரி சிங்காரம்



## மகரம்

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

**பிறருக்கு உதவி செய்வதையே பெருமையாகக் கருதும் மகர இராசி நேயர்களே! பிள்ளைகளால் பெருமை சேரும் நேரம்!**

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்நது பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சனி உச்சம் பெற்று செவ்வாயுடன் இணைந்து இருக்கிறார். ஆதித்யத்தின அடிப்படையில் பார்க்கும் பொழுது செவ்வாய் சுக லாபாதிபதியாக இருப்பதால் அவருடன் இணைந்திருப்பது ஒரு வழிக்கு யோகம்தான் என்றாலும், சனி செவ்வாயுடன் சேர்க்கை முரண்பாடான கிரக சேர்க்கை அல்லவா?. எனவே தொட்ட காரியங்களில் ஒன்று இரண்டு தாமதப்படலாம்.

ஆயினும் குருவின் பார்வையும், சுக்ரனின் பார்வையும் சம அளவில் உங்கள் ராசியின் மீது பதிகிறது. எனவே, பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். என்றாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். அஷ்டமத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் அரசுவழித் தொல்லைகளைச் சந்திகக நேரிடும். நல்ல பொறுப்புகளிலும், பதவிகளிலும் இருப்பவர்களுக்கு திடீர் என பதவி மாற்றங்களையும், இலாகா மாற்றங்களையும் காண நேரிடும். வாக்கு ஸ்தானாதிபதியுடன் அங்காரகன் இணைந்து இருப்பதால் உடன் பணிபுரிபவர்களிடம் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. பின் விளைவைச் சிந்திக்காமல் பேசுவதன் மூலம் பிரச்சினைகள் உருவாகலாம்.

ராஜகிரகம் மறைவிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சம் பொறுமையுடன் செயற்படுவதுதான் நல்லது. கோபத்தைக் குறைத்துக் கொள்வதன் மூலமும், கொடுக்கல் வாங்கல்களில் விழிப்புணர்ச்சியோடு இருப்பதன் மூலமும் அமைதி காண இயலும். செவ்வாயக் கிழமை தோறும் செம்பருத்தி மாலை அல்லது செவ்வரளி மாலை அணிவித்து துர்க்கையை வழிபட்டால் துயரங்கள் விலகி ஓடும்.

அஷ்டமத்தில் புதன் சஞ்சரிக்கிறார். மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தை கொடுக்கும என்பார்கள். எனவே பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். பணவரவு திருப்தி தரும். தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும். புத-ஆதித்ய யோகம் செயற்படுவதால் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். ஒன்பதாம் இடத்தில் உள்ள ராகு ஒளிமயமான வாழ்விற்கு வழிகாட்ட வேண்டுமானால் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து வருவது நல்லது. அதே நேரத்தில் சகாய ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கின்றார். எனவே எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்க, கேதுவிற்குரிய தெய்வமாக விளங்கும் விநாயகப் பெருமானை வழிபடுவது நல்லது. ஆவணி சதுர்த்தியில் விரதமிருந்து ஆனைமுகப் பெருமானை வழிபட்டால் உங்கள் தேவைகள் அனைத்தும் நிறை வேறும்.

**உச்ச புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்டு 26 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறப்போகிறார். ஒன்பதில் உச்சம் பெறும் புதன் ஓரளவு உங்களுக்கு நற்பலன்களையே வழங்குவார். அஞ்சல் வழியில் அனுகூலத் தகவல் வந்து சேரும். அருகில் இருக்கும் ஆன்மிக பெரியவர்களின் ஆலோசனைகள[illegible] வளர்ச்சி காண்[illegible] சேர்க்கை அதிகரிக்கும். தந்தை வழியில் இருந்த தகராறுகள் அகலும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும்.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 1 ஆம் திகதியன்று விருச்சிக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். சுக லாபாதிபதியான செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். கடன்சுமை பாதிககு மேல் குறையும். கட்டிடப் பணி பாதியில் நிற்கிறதே என்ற கவலை அகலும். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 5,10 இற்கு அதிபதியான சுக்ரன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இந்த நிகழ்வு செப்டம்பர் 1 ஆம் திகதி நிகழவிருக்கிறது. இந்த நேரத்தில் கூட்டுத் தொழிலில் மாற்றம் செய்வீர்கள். பங்குதாரர்களில் ஒரு சிலரை விலக்கிவிட்டுப் புதியவர்களை இணைத்துக் கொள்ளும் எண்ணம் மேலோங்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்க பெறும் முயற்சி எடுத்ததின் விளைவாக, ஒரு சில வரன்கள் வந்து சேரும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். மணிவிழாக்கள், மண விழாக்கள், பெண்களின் சுபச்சடங்குகள் போன்ற விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். பூர்வீகச் சொத்துக்களிலிருந்த தகராறுகள் அகலும். இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும், சனிக்கிழமை தோறும் விஷ்ணு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் தொடக்கத்தில் விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம் தான். செப்டம்பர் 1 ஆம் திகதிக்கு மேல் செல்வநிலை உயரும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் மாதத்தின் மையப் பகுதியில் வந்து சேரும். சிம்ம சுக்ரனின் சஞ்சாரத்தால் அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு கிட்டும். புதிய ஆபரணங்களை வாங்கி அணிந்து மகிழ்வீர்கள். கைமாற்றாக கொடுத்த தொகை வந்து சேரும். கணவன-மனைவி அன்னியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் பெருகும் மாதமாக இம்மாதத்தைக் கருதலாம். சனீஸ்வரர் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

## பிள்ளைகளால் பெருமை சேரும் நேரம்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014

சிறியோர்முதல் பெரியோர் வரை அனைத்து விதமான
ஆடைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## கீர்த்திகா ரெக்ஸ்

VISA

கடன் அட்டை, Visa அட்டைக்கு
கொள்வனவு செய்யமுடியும்.

உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

## KANESAN STORES

Wholesale & Retail Dealers in TEXTILES

K.SIVANESAN
Proprietor

201, K.K.S. Road,
Jaffna.
TP:- 021 222 2830,
077 445 7344



சகல விதமான நகைகளையும் ஓடர் செய்து பெற்றுக் கொள்ள

## நியூ கவுசிக் ஜூவல்லறி

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

T/P. 0772182647



## இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைஸ்

இராஜபுரம்

பெண்களுக்கான சாறி,சல்வார்,ஆண்களுக்கான சேட்,ரீசேட்,
ரெடிமேட் மற்றும் சிறுவர்களுக்கான
சகல ஆடைவகைகள்

பட்டுச் சேலைகளின் சோலை வனம்

RAJASWARIE TEXTILES

இல.105,மின்சார நிலைய வீதி,யாழ்ப்பாணம்
தொ.பே.021-222 6953

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்...

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடைவைகள்
CD,VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து
Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில்
பெற்றுக் கொள்ளவும், தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
TP:-021 222 5392

WESTERN UNION
MONEY TRANSFER



வல்வி
னைகள்
தீர்க்கும்
நல்லை
நாகையா!

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## லெ.வேணுகோபால் ஆச்சாரி இராமன்
## கௌரி அம்பாள் சிற்பாலயம்

பேரின்பநாதன் (அத்தான்)

புள்ளி மயிலோனே முருகா சரணம்

ஐம்பொன் விக்கிரகங்கள்,கோயில் அசையாமணி,
கொடிமரம், கலசங்கள்,அங்கிகள்,திருவாசிகள் மற்றும்
தகட்டு வேலைகளும் செய்பவர்கள்.

19 கஸ்தூரியார் வீதி,
1ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். T/P: 077[illegible]

## உடனடி வேலைவாய்ப்பு

நீங்கள் A/L முடித்து
காத்திருப்பவரா
இது ஒரு அரிய
சந்தர்ப்பம்.

Optimo (Internatinal) நிறுவனத்திற்கு
Administration Training Supervisor,
Training Assistant, Manager, Branch Manager
முன் அனுபவம் அவசியமற்றது.
தங்குமிடம் இலவசம். உடனடியாக
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

077 1908997, 077 0771377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா


சிறப்புமலர்-24.08.2014

## சித்தரா
## றெஜிபோம் டிசைனிங்
அன்ட் ஸ்கிறீன் பிறிண்டிங்

மங்களகரமான நிகழ்வுகளுக்குரிய
றெஜிபோமில் நவீன முறையில்
(INDIAN TECHNOLOGY)
வடிவமைக்கப்பட்ட எழுத்துக்கள் (ஆங்கிலம், தமிழ்,3D) பூக்கள்,உருவங்கள்,ஐசிங் கட்டிங் மற்றும் நீங்கள் விரும்பிய டிசைன்களில் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

வர்த்தகர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

இல 49A, அச்சுக்கூட லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T/P: 0755445901



## METHU'S
Kids 'N' Baby Care



195.Navalar Road,
Jaffna
T.P: +94773131622

பார் எங்கும் அருளாட்சி புரியும்
சண்முகப் பெருமனே
சரணம்! சரணம்!! சரணம்!!!

## OLYMPIA SPORTS
Dealers in all kind of Sports Goods
Specialist in Sports Wears.



No.06, Jummah Mosque Lane,
Kasthuriyar Road,
Jaffna.
Tel: 021-222 3490
mobile: 0778060267
E- mail: olympiasportsjaffna@gmail.com

பக்தர் புடை சூழ இரதத்திலே பவனி வரும்
நல்லூர் குமரனுக்கு அரோகரா!



முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டியில் கனடா பறக்க ஒரு மாதம் போதும். சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, ஜேர்மனி, இத்தாலி விரைந்து செல்ல 100 வீத விசா உத்தரவாதம். UK சென்று படிக்க, உழைக்க IELTS தேவையே இல்லை. நியூசிலாந்தில் படிக்கவும் IELTS தேவையும் இல்லை. 2 வருடத்தில் ஆஸி பறக்கலாம். விசிற் விசா படிக்கும் விசாக்களுக்குரிய ஆலோசனைகள் அனைத்து நாடுகளுக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

## திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016 / 021 568 9090



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014




கண்டேனையா!
நகர்ந்து வருமொரு
ரதத்தைக்
கண்டேனையா
நல்லை நகர்த்
திருத்தலத்தினிலே!
வேலொன்று
தெரியுதையா- எம்
வேலவன்
வருகின்றானென்று
திருக்கரமொன்று
தெரியுதையா-
குமரனின்
திருவருள்
கிடைக்குமென்று-
நின் வதனம்
கண்டேனையா-
யாமிருக்க
பயமேனென்று
பகர்கிறாயென்று!

மிஷாந்தி
செல்வராஜா,
அரியாலையூர்.

---

யாழ்.மண்ணின
முத்தான முருகனே!
ஓம் என்னும்
சரவண பவனே!
சூரனை அழித்த
வீரனே-அழகின்
திருவுருவமே
போற்றி! பேற்றி !
நல்லூரின்
கதிரவனான
கந்தனே
இருபத்து
நாளாவது இன்று -
உன்
வடம் பிடித்து
மக்கள் வீதியால்
அசைய- நீர்
ரதத்தில் மெது
மெதுவாக அசைந்து
எமக்கு
அருள் அளிப்பீர்
ஆக!

சி.நாகசுலோஜன்
யா/உரு.சை.த.வி.



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014


நல்லூர் உற்சவ கால சிறப்பு தள்ளுபடி
சகல கணினிசார் உபகரணங்களும் மலிவு விலையில் 50% வரை

havit, mworks, CCiVO, A4TECH, TOSHIBA, hp, EPSON, Canon, BIOSTAR, ZEBEX, BIXOLON, SAMSUNG and many more brands......

Our main services are:
- SALES, SERVICE & MAINTENANCE
- NETWORK SOLUTIONS
- POS & TAG SYSTEMS SOLUTIONS
- CC TV, SECURITY SYSTEMS SOLUTIONS
- SOFTWARE SOLUTIONS & DEVELOPMENT
- TIME ATTENDENCE SYSTEM SOLUTION



Hotline:0777874707
நிபந்தனைக்கு உட்பட்டது

SDS COMPUTER TECHNOLOGIES
No.46,College Road(off Kasthuriyar Road),Jaffna.
Tel./Fax:021 222 4500, Mobile:077 787 4705



L New Nelson Learners
நியூ நெல்சன் லேணர்ஸ்
DS - 590
89,Kandy Road, Chundukuli,Jaffna
T.P. 0212224527,0773581916
Fax:0212229109

127,Pointpedro Road, Nelliyadi,Karaveddi. T.P.0214923115
76,Ramalingam Veethy, Chavakachcheri, T.P.0214923114


**நல்லை நகர் வாழ் முருகா**

நல்லை நகர் நாம் செல்வோம்
நல்லைக் கந்தன் அருள் பெறுவோம்
நலமுடனே நாளெல்லாம் வாழ்வோம்
நானிலமும் போற்றிடவே!- முருகா
நீங்காதருள் மழை பொழிந்திடுவாயப்பா

**அகக்கண் மலர்ந்தருள்வாய் ஐயனே!**

அழகு வேலவனே
அடியார் குறை தீர்ப்பவனே
அன்பின் நாயகனே
அடைக்கலம் அளிப்பவனே
அவனியெல்லாம் நிறைந்திருப்பவனே
அகக்கண் மலர்ந்தருள்வாய் ஐயனே!

ஆக்கம்:
செல்வி மிஷாந்தி செல்வராஜா,
அரியாலையூர்.

**தேரேறி வாருமையா**
**எம் தேசம் செழிக்க**

நல்லையில் கோவில் கொண்ட
நம்பி நம்பி
மக்களிருப்பதனை
நம்பி நம்பி
வீதி எங்கும் உன் நர்மம்
ஒலிக்குதையா
தேடுகிறோம் உனை
காணவில்லை குமரையா
வேதனையில் தவிக்கிறோம்
தேரேறி வாருமையா
மனங்கள் மகிழ்ந்தாடட்டும்
வீதி எங்கும் காவடிகள்
வாசல் எங்கும் தோரணங்கள்
பாடி பரவசமாய் உனை
பார்க்க துடிக்கும் அடியவர் முன்
தேரேறி வாருமையா

சி.கலாமணி
ஸ்காபரோ
கனடா

**நல்லூரின் நாயகனே!**

கீழ்வான் எழுவதும் மேல்வான்
தொழுவதும்
உன் பதியிலே கண்டேன்- நான்
தினம் உன் பதி வருவதை நீ
கண்டாய்- ஏன்
என் பிணி நீக்க நீ மறந்தாய்?
இடர் பல வரினும் எண்ணுவதே
உன் நாமம்
எண்ணவில்லை நீ இன்று என் நலம்
நான் ஊர் தாண்டி சென்றாலும் நாயகா!
உன் திருவடி மறந்ததில்லை- தேர் ஏறி
வந்திடும் நீர்- என் தேகநலம் காத்திடவே
என்றும் உன்னை மறவாது என் மனம்
நாயகனே!

எஸ்.தனுரேகா
நல்லூர்.





உங்கள் பட்டப்படிப்பிற்கான கனவை நனவாக்க BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES வழங்கும் எதிர்கால சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்



BTEC HND Leading to UK Degrees in
Computing & Systems Development
Quantity Surveying
Civil Engineering
Telecommunication Engineering
Biomedical Science
Law
Business Management
Marketing
HRM

செப்டெம்பர் இற்கான உள்வாங்கல் (Intake) பதிவுகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

Type your Name & Address Send to 0777 102131 BCAS CAMPUS

இன்றே உங்கள் பெயர் மற்றும் விலாசத்தை 0777 102131 க்கு SMS மூலம் அனுப்பி முற்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
No: 16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T.P: 021 221 9910


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014



நல்லையம் பதியில் குடிகொண்ட வடிவேலா!
நம் அடியவர்க்கு நல்லருள் செய்பவனே
ஆறுமுகமானவனே தேரேறி வந்திடுவாய்.

MATHI COLOURS


உங்கள் இல்லங்களில் நடைபெறவிருக்கும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு.....




## மதி கலர்ஸ்

திருமண அழைப்பிதழ் காட்சியறை

எண்ணியவை கைகூட, எல்லோரும் ஈடேற
மண்ணில் இமையவர்போல் வாழ்வுபெற - எண்ணுவையே
அஞ்சலென நல்லையிலே ஆளும் குகன்பதத்தை
நெஞ்சில் தினமும் நினை.







இல.15/2, முருகேசர் லேன், முத்திரைச்சந்தி, நல்லூர். தொ.பே: 021 222 9285, 0777222259
Web: mathicolours.com email: mathicolours@gmail.com Facebook: mathicolours

## ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர் Herbal Health Care Centre













யாழ்ப்பாணத்து சித்தமருத்துவமுறைகள், இந்தியா கேரளா ஆயுர்வேத, சித்தமருத்துவ முறைகளை உள்ளடக்கியபக்க விளைவற்றமுற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது. சித்த மருத்துவ நிபுணர்களினால் பாரிசவாதம், நரம்புதளர்ச்சி, பேச்சுக்குறைபாடு, கண்ணில் ஏற்படும் பாதிப்புகாதுகேட்பதில் உள்ள குறைபாடு, முள்ளந்தண்டுப்பிரச்சினை, இளமையில் ஏற்படும் முதுமை போன்றவற்றுக்கு பஞ்சகர்மசிகிச்சையும், குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, அஸ்மா போன்றவற்றுக்கு Herbal Nebulaization & Nasal Therapy முகப்பரு, தலைமுடியுதிர்தல், வயிற்றுப்புண், நீரிழிவு இருதயபாதிப்பு, வாதரோகங்களுக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்படுகிறது.




குறிப்பு: பிறப்பிலே ஏற்படும் Cerebral Palsy, Autism Spectrum diso rders (Global Mental Disorders), Down syndrome இவற்றிற்கு சிகிச்சை நடைபெறுகிறது.

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 021.2222537. 0750413579, 0778201195 முற்பதிவு அவசியம்




*Dr.G.Sritharan B.S.M.S (SL) M.Phil (Jaf.), Chief Physician & Managing Director, Dr(Mrs) S.Anpuchelvy B.S.M.S (SL), M.D(S)(India), Consultant Physician Herbal Health Care Centre*

65, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)

யாழ்ப்பாணத்தில் ஆயுர்வேத சிகிச்சையை முழுமையாக ஆரம்பித்துள்ள தனியார் ஆயுர்வேத நிறுவனம் ஆயுர்வேத வைத்திய நிபுணர்களை முற்பதிவு செய்யலாம்.













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014




## மலிவு விற்பனை

Mega Sale











தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்

★ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான ((Coffee Table இலவசம்

★ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை (Pillow), Bed sheet மற்றும் 2 Pillow Covers Free.

★ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Damro Door களுடன் ஒரு Door Lock இலவசம்

★ Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.

★32", 40",50" LED TV களுடன் ஒரு DVD Player இலவசம்.

★25000/= க்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.

★ Damro, Piyestra, Nilkamal, Phonix, Arpico ஆகிய பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

## Jamuna Furniture

181, Navalar Road, Jaffna.
TP:No. 021 222 1092, 077 757 4776

---

BAJAJ Discover

## விசேட சலுகை!

புதியதாக அறிமுகமாகியுள்ள எரிபொருள் சிக்கனம் கொண்ட

Discover 100m, Discover 125m



பஜாஜ் இலங்கையில்

நீங்கள் கொள்வனவு செய்யும் சகல பஜாஜ் மோட்டார் சைக்கிள்களுடனும் ஹெல்மெட் மற்றும் ஜக்கெட் இலவசம்!

இச்சலுகை 2014 ஓகஸ்ட் 25 முதல் செப்டெம்பர் 25 வரை மட்டுமே.

அதி சிறந்த

- எரிபொருள் சிக்கனம்
- மீள் விற்பனை விலை
- பொருளாதாரச் சிக்கனம்
- செயற்பாடு
- தொழில்நுட்பம்
- விற்பனை
- விற்பனைக்குப் பிந்திய சேவை
- தோற்றம் மற்றும் பல மாதிரிகள்
- சேவை உதிரிப்பாகங்கள் மற்றும்
- விற்பனை வலையமைப்பு



BAJAJ

## S.J.MOTORS

SOLE AGENT FOR BAJAJ MOTOR CYCLES

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம் PB270

73, Stanley Road, Jaffna

Tele & Fax:- 0094-021-222 4554
077 1711 819

அனைத்து பஜாஜ் மோட்டார் சைக்[illegible]
குறைந்த கட்டணத்தில்-லீசிங் வசதி [illegible]து தரப்படும்.

---



## பிள்ளையார் இன் உணவகம்

PILLAIYAR INN HOTEL & RESTAURANT

மேலும் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு எமது உணவகம் காலை 8 மணியிலிருந்து இரவு 11 மணிவரையும் திறந்திருக்கும். இந்திய சமையல் வல்லுநரின் சாப்பாடுகளும் தோசை, மசாலா தோசை, வடை, சப்பாத்தி, பூரி, மதிய உணவுகள் சிற்றுண்டிகளுடன் தயாரித்து வழங்கப்படும். ஒருமுறை விஜயம் செய்து ருசித்துப்பாருங்கள்.

Email:- pillaiyar.in@gmail.com
Web:-www.pillaiyarinn.com
Tel-021 222 2829
Fax- 021 222 4449

---

## THUSHA

OPTICAL AND DENTAL WORKS

துஷா

பல்,மூக்கு கண்ணாடியகம்

Free Eye Testing



கண்பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்

T.P: 0212223461
No.544,Hospital Road,Jaffna.
இல.544,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014


YOGIS

INSTITUTE OF BEAUTY THERAPY,
HAIR DRESSING & HOME SCIENCE (Pvt.) Ltd.



நடைபெறும் வகுப்புக்கள்
அழகுக்கலை. Advanced Beauty Culture & Hair Dressing Diploma Course
Advanced Cosmetology (Diploma Course)
நவீன ஒப்பனையும் தலை அலங்காரங்களும் (Advanced Bridal Make Up- Hair Styles)
வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்.
கேக் ஐசிங் , மாச்சீனி மலர்கள் (Birthday Cakes, Fondant Structure & Sugar Flowers)



- அழகுக்கலையின் தன்னிகரற்ற நிறுவனம்
- 25 வருடங்களுக்கும் மேலான அனுபவம் வாய்ந்த நிபுணரின் கைவண்ணம்.
- இந்தியாவின் அதி நவீன அழகுக்கலை நுட்பங்களின் வெளிப்பாடு யாழ்ப்பாணத்திலும்.
- மணப்பெண் அலங்காரத்தின் தலைசிறந்த நவீன பரிமாணங்கள்.

இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றுக் கொள்ள நாடுங்கள் யோகீஸ்...



MS. YOGINI SHANMUGANATHAN,
Diploma in High Tec, Aesthetics & Cosmetology (India),
Diploma in Advanced Bridal Makeup & Character Makeup (India),
Diploma in Advanced Modern Make -up with Air Brush Make-up (India)
Diploma in Home Economics (Sri Lanka).

No. 75, Amman Road, Nallur, Jaffna.
TP:-021 222 2796, 0777 164 923
Email: yogisbeauty@gmail.com, web:www.yogisbeauty.com



DOMEX
WE DELIVER ISLANDWIDE

உள்ளூருக்கான பொதிகள் சேவை

குறைந்த கட்டணம், நம்பிக்கை, பாதுகாப்பு, ஒரு நாள் சேவை

- இருந்த இடத்திலிருந்தே நீங்கள் பொதிகளை அனுப்பிக் கொள்ளவும் பெற்றுக் கொள்ளவும் முடியும்
- பொதிகளை பெற்றுக் கொள்ளும் போது பணம் செலுத்தும் வசதி
- 100 கிலோவிற்கு அதிகமாக நிறையுள்ள பொதிகளுக்கு கட்டண விகிதத்தில் விசேட விலைக் கழிவு உண்டு.
- மாதாந்த அடிப்படையிலான சேவைகளுக்கு 'பக்கேஜ்' முறையில் கட்டணம் நிர்ணயிக்கப்படும்.

அகில இலங்கையில் 34 கிளைகளைக் கொண்டு
ஒரு வலையமைப்பின் கீழ் சேவையாற்றும் நிறுவனம்

இந்தியாவிலிருந்து வரும் பொதிகள், கடிதங்களுக்கு
விசேட விலைக்கழிவில் இறக்குமதி செய்து கொடுக்கப்படும்.



உங்கள் தேவைக்கு சரியான தெரிவு
டொமெஸ்டிக் எக்ஸ்பிரஸ்

இல. 340, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். TP:- 021 7306307, 0766919277


## நல்லூர் தேர்த்திருவிழாவிற்கான ஆளுநர் வாழ்த்து

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ்ப்பா ணம் நல்லூர்க் கந்த சுவாமி கோவில் வருடாந்த திருவிழா ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியன்று பூரண சந்திரோதயத்தின் 6 ஆம் நாள் கோவில் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 26 நாட்கள் தொடர்ந்து இடம் பெறுகிறது. பாரம்பரிய வழக்கப்படி திருவிழா வின் 24 ஆம் நாளில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை சரியான முகூர்த்த நேரத்தில் கோவில் தேர்த்திருவிழா விசேட பூஜைகளுடன் இடம்பெறுவதைத் தொடர்ந்து அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இந்து நாட்காட்டியில் மிக முக்கிய நிகழ்வாக இடம்பெறும் நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவில் பங்குபற்றுவதற்கென நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பக்த கோடிகள் பலரும் இங்கு வருகின்றனர். தேர்த்திருவிழாவும் தீர்த்தத் திருவிழாவுமே கோவில் திருவிழாவின் சிகரம் வைத்த நிகழ்வுகளாக இடம்பெறுகின்றன.

நாட்டின் பழம்பெரும் கோவில்களுள் ஒன்றாக இந்த நல்லூர் கோவிலும் உலக நாடுகளிடையேயும் பிரபல்யம் வாய்ந்த ஒன்றேயாகும். தமிழ்மக்களுள் அநேகமான இந்துக்கள் தமது சமய விழாக்களை ஆன்மீகமான முறையில் கொண்டாடுவதற்கான எவ்வளவோ சுதந்திரமான ஓர் சூழ்நிலை இந்த மாகாணத்திலும் இந்த நாட்டிலும் நிலவுவதற்காக தற் போதைய அரசுக்கு அவர்கள் நன்றி கூறுகிறார்கள்.

இந்து மற்றும் புத்த சமயத்தவர்களுக்கி டையே சமய ரீதியில் எவ்வளவோ விடயங்கள் பொதுவானவையாக இருந்து வருகின்றன. தெற்கேயிருந்து வரும் பௌத்த மக்களும் கூட தாம்கதிர் காமத் தெய்வம் என்றழைக்கும் முருகப் பெருமானை வழிபடுவதற்காக வடக்கிற்கு பயணமாக வருகிறார்கள். இவ்விதமான இத் திருவிழா வானது அமைதி, சமாதானம் மற்றும் நல்லி ணக்கம் போன்றவற்றுக்கு சமய ரீதியிலான ஒரு சிறந்த அடையாளமாகவே திகழ்கிறது.நல்லூர் முருகன் திருவிழா ஒழுங்கமைப்பா ளர்களுக்கு தேர்த்திருவிழா வெற்றிகரமாக அமைவதற்கான நல்லாசிகள் கூறி வாழ்த்துகின்றேன்.

மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி,
வடமாகாண ஆளுநர்

## எல்லோருக்கும் சமாதானம் கிடைக்கட்டும்

அலங்காரக் கந்தன் என எல்லோராலும் அழைக்கப்படும் நல்லூரான் தேரேறி பக்தர்களுக்கு அருளாசி வழங்கும் தேர் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நானறிந்த வரையில் நல்லூர் திருவிழா வடபுலத்து மக்களின் தேசிய விழாவாகும். இந்த விழாவை கொண்டாடவும் அருளாசியை பெற்றுக்கொள்ளவும் உலகமெங்கும் சிதறுண்டு கிடக்கும் தமிழ் மக்கள் நல்லூர் முருகன் திருத்தலத்தில் சங்கமித்து நிற்கும் காட்சி மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியானதாக இருக்கும்.

பல்வேறு துன்பங்களினால் ஆட்பட்டு துயருறும் மக்கள் அவற்றிலிருந்து விடுபடவும் தங்கள் நேர்த்திக் கடன்கள் நிறைவு செய்யவும் தேர்த் திருவிழா அன்று ஒன்று கூடியிருப்பார்கள்.

நல்லூர் உற்சவ காலத்தில் நல்லூர் ஆலய சூழல் பக்தி பரவசத்தில் நிறைந்திருக்கும். பக்தி இசை நிகழ்ச்சிகள், சமய பிரசங்கங்கள் என விசேட நிகழ்வுகளால் நிறைந்திருக்கும்.


இன்றைய சமாதான சூழல் தேர்த்திருவிழா சிறப்புறவும் பல அடியார்கள் பங்குபற்றவும் மேலும் வாய்ப்பாக அமைந்துள்ளது. மக்களுக்கும் நாட்டிற்கும் நிரந்தர சமாதானம் ஏற்படவும் மக்கள் மகிழ்ச்சியாக வாழவும் முருகனின் அருள் கிடைக்க ஆசிவேண்டி நிற்கின்றேன்.

இ.இளங்கோவன்,
ஆளுநரின் செயலாளர்,
ஆளுநர் செயலகம்,
வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்றிறனற்ற வடக்கு மாகாண சபையானது மூலதன நிதியைக்கூட பயன்படுத்துவதில்லை

## எதிர்க்கட்சி தலைவர் பகிரங்க குற்றச்சாட்டு



செயற்றிறனற்ற வடக்கு மாகாண சபையானது ஒதுக்கப்பட்ட மூலதன நிதியில் 30 வீதத்தைக் கூட கடந்த ஜுலை மாத இறுதிக்குள் பயன்படுத்தத் தெரியாதிருப்பதாக ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திட்டம் பற்றி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒரு தொகுதியினருக்கு அறிவுறுத்தும் கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏனைய மாவட்டங்களில் சமுர்த்தி திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில் வடக்கைப் பொறுத்தவரையில் வவுனியாவில் சிறுபகுதியிலும் மன்னாரில் ஒருபகுதியிலுமே முதலில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவுடனும் சமுர்த்தி அமைச்சராக இருந்த எஸ்.பி திசாநாயக்கவுடன் தொடர்ந்து கலந்துரையாடியே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்திட்டத்தை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்தார்.

அப்போதைய அரசு ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரையே எதிர்க்கட்சியை விட அதிகமாகக் கொண்டிருந்தது. அச் சந்தர்ப்பத்தில் ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரின் பலமும் அரசுக்கு இருந்ததால், அப்பலத்தை பிரயோகித்தே அமைச்சர் இத்திட்டத்தை இங்கு கொண்டு வந்தார் என்பதை யாரும் மறந்து விடமாட்டார்கள்.

இத் திட்டத்தை இங்கு நடைமுறைப்படுத்துவதற்கான சிந்தனையே அப்போதைய அரசுக்கு இருக்கவில்லை. இன்று இத்திட்டத்தின் மூலம் சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் பயன்பெறுவதுடன் பலர் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுள்ளனர்.

இந்தநிலையில் வாழ்வின் எழுச்சித் திட்டம் கொண்டு வரும் போது இது 13 ஆவது சீர்திருத்தத்தை மீறும் செயலாகுமென்றும், மாகாண சபைக்குரிய அதிகாரங்களைப் பறிக்கும் திட்டம் என்றும் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

அனைத்து மாகாணங்களிலும் இத்திட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டும். அல்லது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வேண்டும் என மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அப்போது வடக்கு மாகாணத்திலே மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபை இருக்கவில்லை. ஆளுநருக்கு தலையிட இதில் அதிகாரமில்லை.

இந்நிலையில் நாடாளுமன்றத்திலே இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. அரசு நினைத்திருந்தால் இத்திட்டத்தை இம் மாகாணத்தில் அமுல்படுத்தாமல் இருந்திருக்கலாம். எனினும் எமது இணக்க அரசியல் காரணமாகவே இத்திட்டம் இன்று இங்கு அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைக்கு உரிய அதிகாரங்களைக் கூட பயன்படுத்தத் தெரியாமல் இருக்கிறார்கள். இதனை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஜப்பானில் நிலச்சரிவு; சோகத்தில் இலங்கை

(கொழும்பு)

ஜப்பானின் ஹிரோஷிமாவில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சொத்து சேதங்களுக்கு இலங்கை மக்கள் தமது ஆழ்ந்த உணர்வுபூர்வமான சோகத்தையும் அதிர்ச்சியையும் வெளிப்படுத்துவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கமும், மக்களும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் அமைச்சு கூறியுள்ளது.

இந்த இக்கட்டான நேரத்தில் ஜப்பான் மக்களுடன் இணைந்து குறிப்பாக இயற்கை பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பிரார்த்திப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானிய மக்கள் பிறவி மனோபலம் மற்றும் தைரியம் கொண்டவர்கள் என்பதால் சவால்களை அவர்களால் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை இலங்கைக்கு உள்ளது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது. (இ)

# சவாலையேற்று ஹிருணிகா ஐஸ் வாளி நீரில் குளித்தார்

## மூவரை சவாலுக்கும் அழைத்தார்

(கொழும்பு)

மேல் மாகாணசபை உறுப்பினர் மல்ஷா குமாரதுங்கவின் சவாலை ஏற்று ஐஸ் நீரில் குளித்த மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, மேலும் மூவருக்கு ஐஸ் நீரில் குளிக்கும் சவாலை விடுத்தார்.

ஊவா மாகாணசபையின் ஐ.தே.க முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்ணான்டோ, ஜே.வி.பி உறுப்பினர் லால்காந்த மற்றும் மேல் மாகாணசபை உறுப்பினர் செனால் வெல்கம ஆகியோருக்கே ஹிருணிகா இந்த சவாலை விடுத்தார்.

மேல் மாகாண சபை உறுப்பினர் மல்சா குமாரதுங்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகிய மூவரையும் "ஐஸ் வாளி சவாலுக்கு" அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)



பிராந்திய சுகாதார திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான இலவச மருத்துவ முகாம் வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது.... (படம்:-என்.குமார்)

# கூட்டமைப்பின் இந்திய விஜயம் குறித்து குழப்பம் தேவையில்லை

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் தொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளது.

இந்த விஜயமானது அரசாங்கத்தை பாதிக்காது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்திய தலைவர்களை சந்திக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கையை அந்நாட்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இந்த விஜயத்தை ஒழுங்கு செய்திருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பிலேயே கவனம் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினை குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எது என்பதே மிகவும் முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு ஏற்கனவே தெரிந்த விடயமென அமைச்சர் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# வாரம் ஒரு தகவல்

## பார்த்த ஞாபகம்

"எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம் சேர்!"

"என்ன சந்தேகம்?"

"ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் முகத்தைப் பார்த்து இவன் இன்னார்தான் என்று அடையாளம் கண்டுபிடிக்கிறான்... மிருகங்களுக்கு எல்லா முகமும் ஒரே மாதிரித் தானே இருக்கிறது. அதெல்லாம் எப்படி அடையாளம் கண்டுகொள்கிறது?"

"அது அதுக்கு ஒரு டெக்னிக் இருக்கிறது! கரடிகள் என்ன செய்யும் தெரியுமா? தங்கள் குட்டிகளை நாக்கினால் நக்கும். பின் இரை தேடப் போகும். திரும்பி வந்ததும் குட்டிகளை முகர்ந்து பார்க்கும். தனது உமிழ்நீர் வாசனையை வைத்து இதுதான் தன்னுடைய குட்டிகள் என்று அடையாளம் கண்டு கொள்ளும்"

அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சியாளர் புதிதாக குட்டிபோட்ட ஒரு தாய்க் கரடிக்கு தூக்க மருந்து கொடுத்துத் தூங்கவைத்தார். பின்னர் அதன் மூக்கில் தலைவலித் தைலத்தை தடவிவிட்டார். அந்தக் கரடியின் குட்டிகளுடன் அநாதையாக தவித்துக் கொண்டிருந்த இன்னொரு கரடிக் குட்டியையும் சேர்த்துவிட்டார்.

தாய்க்கரடி தூங்கி எழுந்ததும் அதற்கு தன்னுடைய குட்டிகளை சரியாக மோப்பம் பிடிக்க முடியவில்லை. அநாதைக் கரடிக் குட்டியையும் தன்னுடைய குட்டியாகவே நினைத்து நக்க ஆரம்பித்ததாம்"

"நானும் சில சமயம் அந்தக் கரடி மாதிரி ஆகிவிடுகிறேன் சேர்"

"எப்படி?"

"இன்று காலையில் எங்கள் வீட்டு வாசலில் ஒரு சின்னப்பையனைப் பார்த்தேன். அவனை எங்கேயோ பார்த்த ஞாபகமாய் இருந்தது. சரியாக நினைவுக்கு கொண்டு வரமுடியவில்லை. அரைமணி நேரம் கழித்து தான் ஞாபகம் வந்தது!"

"யார் அவன்?"

"ஹி... என்னோட மகன் தான் சேர்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவுடன் மோதும் அரசாங்கம்!



போர்க்குற்ற விசாரணை விவகாரத்தில் மீண்டும் ஐ.நாவுடன் அரசாங்கம் மோதிக் கொள்ளத் தொடங்கியிருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே இந்த விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆகியவற்றுடன் முரண்பாடுகளை வளர்த்துக்கொண்டு வந்திருந்தது அரசாங்கம்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கான விசாரணைக் குழுவை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமித்த பின்னர் இந்த மோதல்போக்கு உச்சநிலையை எட்டியிருந்தது. ஐ.நா. விசாரணையாளர்களை நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று அறிவித்த இலங்கை அரசாங்கம் அதன்மூலம் ஐ.நா. விசாரணைகளை நிராகரிப்பதாக வெளிப்படுத்தியது.

பின்னர், இலங்கை அரசாங்கம் உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்வதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்கப்போவதாக அறிவித்தது. அதற்கமைய காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கு போர்க்குற்றங்கள் குறித்தும் விசாரிப்பதற்கான அதிகாரங்கள் அளிக்கப்பட்டதுடன் வெளிநாட்டு ஆலோசனை நிபுணர்கள் ஐவரும் நியமிக்கப்பட்டனர்.

இப்போது இந்த நிபுணர்குழு இந்திய நிபுணர் அவ்டாஸ் கௌசல் மற்றும் பாகிஸ்தானிய நிபுணர் அகமர் பிலால் சூபி ஆகியோரும் நியமிக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தாமும் நம்பகமான நடுநிலையான சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்வதற்காகக் காட்டிக்கொள்ளும் முயற்சியில் இறங்கியிருக்கிறது அரசாங்கம்.

இந்த நிலையில் அண்மையில் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அளித்த செவ்வி குறித்து அரசாங்கம் கடும் விசனத்தை வெளிப்படுத்தியது. அவர் ஐ.நா விசாரணைகளில் தலையிட முனைவதாகவும் முன்கூட்டியே விசாரணைகளின் முடிவைத் தீர்மானிக்க முனைவதாகவும் வெளிவிவகார அமைச்சு கடந்தவாரம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இலங்கை அரசாங்கம் ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு அனுமதி மறுத்துள்ளது தமது விசாரணைகளைப் பாதிக்காது என்றும் இலங்கைக்கு வெளியிலேயே ஏராளமான ஆதாரங்களும் தகவல்களும் நிரம்பிக் கிடப்பதாகவும் நவநீதம்பிள்ளை அந்தச் செவ்வியில் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறு இலங்கைக்கு வெளியிலுள்ள ஆதாரங்கள் பற்றி அவர் குறிப்பிட்டது அரசாங்கத்துக்கு ஓர் அச்சத்தையும் மிரட்சியையும் ஏற்படுத்திவிட்டுள்ளது போலும்.

அவ்வாறான ஆதாரங்கள் பொய்யானவை, போலியானவை, நம்பகமானவை என்று வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தது. ஐ.நா விசாரணைகள் மீதோ நவநீதம்பிள்ளை மீதோ நம்பிக்கையில்லை என்று கூறி வந்த அரசாங்கத்தினால் அவர்களின் நகர்வுகளையோ கருத்துக்களையோ கண்டும் காணாதது போன்று இருந்துவிட முடியவில்லை.

அதனை விமர்சனம் செய்யப் போய், ஐ.நா விசாரணைகளில் தமக்குள்ள ஈடுபாட்டை அரசாங்கமே அவ்வப்போது வெளிப்படுத்தி வருகிறது. வெளிநாட்டுச் செய்தியாளர்களை அலரிமாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஐ.நா விசாரணைகளை தாம் நிராகரித்துவிட்டதாகவும் அதனை ஏற்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஐ.நா விசாரணை வேண்டும் என்று கோரியவர்களைத் தவிர வேறெவரும் இந்த விசாரணைகளைத் தீவிரமாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறியிருந்தார். அதாவது இந்த விசாரணைகளை அரசாங்கம் தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை என்று அவர் குறிப்பிட்டிருந்தார். என்றாலும் விசாரணைகள் நடந்தால் நடந்துவிட்டுப்போகட்டும் என்று அரசாங்கத்தினால் இருந்துவிட முடியவில்லை.

அவ்வப்போது ஐ.நா. விசாரணைகளில் மூக்கை நுழைத்துப் பார்க்கிறது. அதனை விமர்சிக்கிறது. அதன்மீது நம்பகத்தன்மை இல்லை என்று வெளிப்படுத்துகிறது. போட்டிக்குத் தாமும் நகர்வுகளை முன்னெடுக்கிறது. இவையெல்லமே ஐ.நா விசாரணைகளை விட்டு அரசாங்கத்தினால் தூர விலகி நிற்க முடியவில்லை என்பதையே உணர்த்துகின்றன. போர்க்குற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என்று விசாரிக்கும்படி காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு அதிகாரம் அளித்தது. அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐந்து வெளிநாட்டு நிபுணர்களை நியமித்துள்ளது எல்லாமே ஐ.நா. விசாரணையின் விளைவுகள்தான்.

ஐ.நா.வின் விசாரணைப்பொறிமுறை அழுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கிய நிலையில்தான் அரசாங்கம் உள்நாட்டுப் பொறிமுறையை உருவாக்கும் முடிவையே எடுக்க முன்வந்தது. எனவே, ஐ.நாவிசாரணைப் பொறிமுறையையிட்டு இலங்கை அரசாங்கம் கவலை கொள்ளவில்லை என்றோ அதன் விசாரணையை யாருமே தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறுவதை ஏற்க முடியாது.

வேறு எந்தத் தரப்பேனும் இதனை தீவிரமாக எடுத்துக்கொள்ளவில்லை என்று கூறினாலும்கூட ஏற்றுக்கொள்ளலாம். அரசாங்கம் கூறுவதை ஏற்க முடியாது. ஏனென்றால் தெரிந்தோ, தெரியாமலோ, விரும்பியோ, விரும்பாமலோ, அரசாங்கம் ஐ.நாவின் விசாரணைப்பொறிமுறைச் சகதிக்குள் சிக்கிக் கொண்டுவிட்டது. இனிமேல் அரசாங்கத்தினால் இந்தச் சகதிக்குள்ளிருந்து கால்களை எடுக்கவும் முடியாது. அதேவேளை, அதற்குள் முற்றாக அமிழ்ந்து போகவும் முடியாது. இந்த இரண்டுங்கெட்டான் நிலை ஒன்று அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அலரிமாளிகையில் வெளிநாட்டுச் செய்தியாளர்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய சந்திப்பின்போது ஐ.நா. விசாரணைக்குழுவை நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை என்ற தமது முடிவை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச.

இது முன்னர் அரசாங்கமும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் கூறிய விடயங்கள்தான். ஆனாலும் அரசாங்கத்தின் போக்கில் எந்த மாற்றமும் ஏற்படவுமில்லை- ஏற்படப் போவதுமில்லை என்பதை அவரது இந்தக் கருத்து எடுத்துக் காட்டுகிறது. ஆனால், அரசாங்கத்தின் இந்தப் பிடிவாதப்போக்கினால் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகம் எந்தக்கவலையும்கொண்டதாகத்தெரியவில்லை.

இலங்கைக்குள் வராமலேயே விசாரணைகளை முன்னெடுக்க முடியும். அதற்கான வழிமுறைகள் உள்ளன என்பதை ஏற்கனவே ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டியிருந்தார். அதைவிட இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வடகொரியாவிலும் சிரியாவிலும் ஐ.நா. விசாரணைக் குழு நுழைவதற்கு அந்தந்த நாட்டு அரசாங்கங்கள், அனுமதி மறுத்திருந்த போதிலும் அங்கு விசாரணைகள் நம்பகமான முறையில் நடத்தி முடிக்கப்பட்டிருந்ததையும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அந்த விசாரணைகளின் நம்பகத்தன்மை குறித்து அந்த நாட்டு அரசாங்கங்களைத் தவிர, வேறெவரும் கேள்வி எழுப்பவில்லை என்றும் நவநீதம்பிள்ளை, தொம்ஸ்சன் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியின்போது குறிப்பிட்டிருந்தார். இத்தகைய நிலையில் மீண்டும் ஐ.நா. குழுவை நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறியிருப்பது ஐ.நாவுடனான முரண்போக்கை வளர்த்துக்கொள்ளவே இலங்கை முற்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் இந்த மாத இறுதியுடன் முடிவடையவுள்ளது. அவரை பக்கசார்புடையவர் என்று கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

அதேவேளை புதிய ஐ.நா மனித உரிமை ஆணையாளர்இளவரசன்சையிட்அல்ஹுசெய்ன், அவ்வாறானவர் இல்லை என்பது போலவும் கருத்து வெளியிட்டிருந்த வெளிவிவகார அமைச்சு அவருக்கு வரவேற்பையும் தெரிவித்திருந்தது. ஆனால், நவநீதம்பிள்ளை ஆரம்பித்துள்ள விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய நிலையிலுள்ளார் புதிய ஆணையாளர் சையிட் அல் ஹுசெய்ன். எனவே, அவருடனும் அரசாங்கத்தினால் இணக்கப்போக்கைக் கடைப்பிடிக்க முடியாது. அதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அலரி மாளிகையில் வைத்து ஐ.நா. குழுவை அனுமதிக்கப் போவதில்லை என்று அறிவித்த பின்னர் பிபிசிக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையின் விஸா தடை, ஐ.நா விசாரணைகளை நிறுத்திவிடாது என்று கூறியிருக்கிறார்.

தொலைபேசி, ஸ்கைப், செய்மதிப் படங்கள் உள்ளிட்ட தொழில்நுட்பங்களின் மூலம் ஐ.நா விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் திட்டவட்டமாக கூறியிருக்கிறார். விஸா வழங்க முடியாது என்று அறிவித்திருப்பதன் மூலம் ஐ.நா விசாரணைகளை தடுத்து நிறுத்திவிடலாம் என்று அரசாங்கம் கருதியிருக்கும் என்று கூறுவதற்கில்லை. அவ்வாறு சிந்திப்பின், அது சீப்பை ஒளித்து வைத்து விட்டால் கல்யாணம் நின்றுவிடும் என்று சிந்திப்பதற்கு ஒப்பாகும். அந்தளவுக்கு அரசாங்கம் முட்டாளாக இருக்கும் என்று கருத முடியாது. ஐ.நா. விசாரணைகளை எதிர்த்துவிட்டு அவர்களை எப்படி உள்ளே அனுமதிப்பது என்ற கௌரவப் பிரச்சினையும் உள்நாட்டில் சிங்கள தேசியவாத சக்திகள் அதனைப் பெரிய விவகாரமாக்கிவிடும் என்றும் எதிர்க்கட்சிகள் அதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டுவிடும் என்ற அச்சமும்தான், அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டுக்கு முக்கிய காரணம். ஐ.நா குழு இங்கு வந்தால் போர்க்குற்றங்கள் குறித்து அறிந்துவிடும் என்று அரசாங்கம் நினைக்கிறது என்று கருதினால் அது தவறானது.

ஏனென்றால் ஐ.நா குழு இங்கு வந்தாலும்சரி வராது போனாலும் சரி, தமக்குத் தேவையான சாட்சியங்களைப் பெற்றுக் கொள்ளும் என்பதை அரசாங்கம் நன்றாகவே அறியும். ஐ.நா விசாரணைக்குழு நேரடியாக இங்கு வந்து விசாரணைகளை நடத்தினால் சற்று அதிகமான சாட்சிகளைச் சந்தித்து விபரங்களை கேட்டறியும், போர் நடந்த பகுதிகளைப் பார்வையிடும் அவ்வளவுதான். இங்கு அனுமதிக்கப்படாது போனாலும்கூட ஐ.நா குழு சாட்சியங்களைப் பெறுவதற்கு ஏராளமான வழிகள் உள்ளன.

இந்த தகவல் தொழில்நுட்ப யுகத்தில் ஸ்கைப் உள்ளிட்ட தொழில்நுட்பங்களின் மூலம் தாராளமாகவே சாட்சியங்களைச் சேகரிக்கலாம். ஐ.நா குழுவுக்கு நேரில் சாட்சியமளித்தால் தாம் அடையாளப்படுத்தப்பட்டு விடுவோம். புலனாய்வாளர்களின் கண்களில் அகப்பட்டு விடுவோம் என்று அஞ்சுவோர்கூட இரகசியமாக நான்கு சுவர்களுக்குள் இருந்தபடியே சாட்சியமளிக்கலாம். அதைவிட போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த சம்பவங்கள் குறித்து ஒளிப்படங்கள், வீடியோக்கள் போன்ற ஆதாரங்களில் ஒன்றுகூட அங்கிருந்த தமிழர்களால் எடுக்கப்பட்டவையல்ல. எல்லாமே படையினரால் எடுக்கப்பட்டவைதான். அவைகூட, சர்வதேசத்தின் பார்வைக்குச் சென்றிருக்கின்றன.

எனவே, போர்க்குற்ற ஆதாரங்களைத் தமிழர்களிடம் மட்டும்தான் திரட்ட வேண்டும், அதை போர் நடந்த பகுதிக்குத்தான் சென்று திரட்ட வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. அதற்குப் புறம்பான முறைகளின் மூலம் அத்தகைய சாட்சியங்களைத் திரட்டுவது ஒன்றும் ஐ.நாவுக்கு கடினமான காரியமாகவும் இருக்காது. அரசாங்கம் இந்தச் சூழ்நிலையை நன்றாகவே அறியும். ஆனாலும் உள்நாட்டு அரசியல் நிலைமைகள் கருதியே ஐ.நா குழுவை அனுமதிக்க மறுக்கிறது. அதேவேளை, ஐ.நா விசாரணை அணுகுமுறைக்கும் இலங்கை அரசாங்கத்தின் விசாரணை அணுகுமுறைக்கும் பெரியதொரு வேறுபாடு உள்ளது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தண்டனை வழங்கும் நீதியை விரும்பவில்லை என்று அமெரிக்காவுக்கான தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளது இங்கு கவனிக்ககத்தக்கது.

ஐ.நாவின் அணுகுமுறை தண்டனை வழங்கும் நீதியின் அடிப்படையிலானது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த விடயத்திலும் இருதரப்புக்குமிடையில் ஒரு இடைவெளி இருக்கிறது. எவ்வாறாயினும், இப்போது அரசாங்கம் போரின்போது போர்க்குற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம் என்று கூறுகின்ற நிலைக்கு வந்திருக்கிறது. இது அரசாங்கத்தின் முன்னைய நிலைப்பாடுகளுக்கு முற்றிலும் முரணானது. அதுமட்டுமன்றி போரின்போது குற்றமிழைக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட படையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அண்மையில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயாரத்நாயக்கவும் கூறியிருக்கிறார். ஆனால், அமெரிக்காவுக்கான தூதுவர் பிரசாத் காரியவசம் தண்டிக்கப்படும் நீதியை தாம் விரும்பவில்லை என்று கூறியிருக்கிறார். இதனால் போர்க்குற்றங்கள் குறித்த உள்நாட்டு விசாரணைகள் உறுதிப்படுத்தினாலும்கூட அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உறுதியற்ற நிலையே காணப்படுகிறது.

அரசாங்கம் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மேற்கொள்ளாமலும் தவிர்க்கலாம். ஆனால் ஐ.நா. விசாரணைகள் போர்க்குற்றங்கள் இடம்பெற்றது உறுதிப்படுத்தப்பட்டால் அடுத்த கட்டம் குறித்து நிச்சயம் பரிசீலிக்கப்படும். எனவேதான், அரசாங்கம் சர்வதேச விசாரணைகளையிட்டு தயக்கம் காட்டுகிறது. எனினும், சர்வதேச விசாரணைகளை அரசாங்கத்தினால் நிராகரிக்க முடிந்தாலும் அதன் தாக்கத்திலிருந்து இலகுவாகத் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதே உண்மை. கடந்தவாரத்தில் இந்திய மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த இரண்டு நிபுணர்களை அரசாங்கம் நியமித்துள்ளது இதனை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறிய மக்களின் தேவைகள் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை

## பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டமானது வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் அழிவுகளில் இருந்து மீள் உருவாக்கம் பெற்று வருகின்ற போதும் பொது மக்களுக்கு மிக அத்தியாவசியமான பொது நூலகம், கலாசார மண்டபம், பேருந்து நிலையம், பொது மலசல கூடம், பொழுதுபோக்கு மையங்கள், பூங்காக்கள் உட்பட பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் மக்கள் மீள்குடியேறி ஐந்து வருடங்கள் கடந்தும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுவதாக குறித்த மாவட்ட மக்களும் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, ஒரு இனத்தின் மற்றும் மாவட்டத்தின் கல்வி, எழுத்தறிவு, வாசிப்புத் திறன் என்பவற்றிற்கு முன்னோடியாக விளங்குவது பொது நூலகங்களாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்த வரையில் அது அறவே இல்லாத நிலை காணப்படுகின்றது.

இடம்பெயர்விற்கு முன்னர் கிளிநொச்சி நகர்ப்பகுதியிலுள்ள பொது விளையாட்டு மைதானத்திற்கு அருகில் பொது நூலகம் ஒன்று பல ஆயிரக்கணக்கான நூல்களை தன்னகத்தே உள்ளடக்கி வெகு சிறப்பாக இயங்கியது.

இடப்பெயர்வின் போது நூல்கள் அழிவடைந்தும் கட்டடம் சேதமடைந்தும் காணப்பட்டன.

மக்கள் மீள்குடியேறிய பின்னர் அதை புனரமைப்பு செய்வதற்கு கரைச்சி பிரதேசசபை முனைந்த போதும் அது முடியாது போயுள்ளது.

அவ்விடம் இராணுவத்தினரின் தேவைக்காக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மாற்றிடம் ஒன்று வழங்குவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரினால் கூறப்பட்டு சில இடங்களை வழங்குவதும் பின்னர் அவ்விடங்களை பிறிதொரு பொது தேவைகளுக்காக வழங்குவதாகவும் உள்ள நிலையில் குறித்த பொது நூலகம் நிரந்தர இடமின்றி செயற்படமுடியாத நிலை காணப்படுகிறது.

இதனால்மக்களும்மாணவர்களும் நூலக வசதியின்றி வாழ்கின்றனர்.

இதேபோன்று கலாசார மண்டபம் ஒன்றும் ஏ-9 வீதியில் அமைந்துள்ள பொதுச்சந்தைக்கு முன்பாக இடப்பெயர்விற்கு முன்னர் இயங்கிய போதும் அது யுத்தத்தினால் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் அவ்விடமும் தற்போது வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

பேருந்து நிலையத்தைப் பொறுத்த வரையில் தனியார் மற்றும் அரச துறையினர் இணைந்த போக்குவரத்து சேவை 24 மாவட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட்டு செயற்படுத்தப் படுகின்ற நிலையில் பேருந்து நிலையம் அமைக்கப்படாது இயங்குகின்ற மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் அமைந்துள்ளது.

பேருந்து நிலையம் இல்லாததால் தெருவோரங்களில் மக்கள் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் நின்றவாறு பேருந்துகளில் பயணிக்கும் நிலை காணப்படுகிறது. இலங்கை வரலாற்றில் மாவட்ட மட்டத்தில் பேருந்து இல் லாத மாவட்டம் என்ற நிலையை கிளிநொச்சி மாவட்டம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தினமும் பல்லாயிரக் கணக்கான பயணிகள் உட்பட பல தரப்பட்ட மக்கள் கூடும் இடமாகவுள்ள கிளிநொச்சி நகரப் பகுதியில் பொது மலசலகூடங்கள் அமைக்கப் படவில்லை.

இதனால் பொது மக்கள் தங்கள் இயற்கை கடன்களை நிறைவேற்ற வர்த்தக நிலையங்கள், பொது சந்தையில் காணப்படும் மலசல கூடங்களை நாடும் அவல நிலை காணப்படுகிறது.

இதேவேளை பொழுதுபோக்கு வசதிகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட அவர்களது உடல், உள செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும்படி பார்த்துக் கொள்வது சம்பந்தப்பட்ட அனைவரினதும் கடமையாகும்.

ஆயினும் கிளிநொச்சி நகரப்பகுதியிலோ அல்லது ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலோ பொது பூங்காக்கள் மற்றும் பொழுது போக்கு மையங்கள் அமைக்கப்படவில்லை.

மேற்படி குறைபாடுகள் குறித்து பொது மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு கூட்டங்களின் போது முன்மொழிவுகளை முன்வைத்த போதும் இவற்றை அமைப்பதற்கான காணிகள் கிளிநொச்சி நகரப் பகுதியில் இல்லையென கூறப்படுகின்றது. இதற்கு மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு சந்தியில் இருந்து நகரப்பகுதி உள்ளடங்கலாக பரந்தன் சந்தி வரையான ஏ-9 வீதியில் இரு பகுதிகளிலும் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கென பல இடங்களில் காணிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் மாவட்ட மக்களின் நன்மை கருதி அத்தியாவசிய தேவைகளுக்கான சில ஏக்கர் காணிகளை ஒதுக்கீடு செய்வதில் அரச அதிகாரிகள் பின்னடிப்பதால் தாம் இவ்வாறான பாதிப்புக்களை எதிர்கொள்வதாகவும் இவ்விடயத்தில் வடமாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர் ஆகியோர் கவனத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு உதவுமாறு அவர்கள் கோரிக்கையொன்றை முன் வைத்துள்ளனர். (2-15)




# வற்றிய குளங்களிலிருந்து மீன்கள் பிடிப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள்

## வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொதுமக்கள் குளத்து மீன்கள் உண்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார். மாவட்டத்தில்நிலவி வரும் கடும் வறட்சியை அடுத்து குளங்களில் நீர்வற்றியுள்ள தால் குளத்து மீன்கள் இறந்து கரை யொதுங்கியுள்ளன. இதனால் அப் பகுதியில் துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் குளங்களில் எஞ்சியுள்ள மீன்களை பிடித்து பொது மக்கள் உண்ணுகின்றனர்.


வற்றிய குள மீன்களை பிடித்து உண்பதால் நோய்த்தொற்றுக்கு இலக்காக வேண்டிய சூழ்நிலை உருவாகக் கூடும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை வியாபாரிகள் குறித்த குளங்களில் மீன்பிடித்து வெளி மாவட்டங்களுக்கு விற்பனை செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இவற்றை உண்ணும் மக்கள் வயிற்றோட்டம், வாந்தி ஆகிய நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

ஆதலால் மழை பெய்து குளங்களில் நீர் நிறைந்த பின்னர், குளங்களில் உள்ள மீன்களைப் பிடித்து உண்ணுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே சுகாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தற்போது குளங்களில் பிடிக்கும் மீன்களை முற்றாக தவிர்க்குமாறு அவர் பொது மக்களை கேட்டுள்ளார். (2-250)





செரண்டிப் சிறுவர் இல்லத்தின் அனுசரணையுடன் இலவச வயலின், மிருதங்க, சங்கீத வகுப்புக்கள் கடந்த 2 ஆம் திகதி மாங்குளத்தில் அமைந்துள்ள மாகாண தொழிற் பயிற்சி நிலையத்தில் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மாலினி வெனிற்றன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. செரண்டிப் சிறுவர் இல்லத்தினரால் வயலின், மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதனை இல்லத்தின் தலைவர் ஏ.கந்தசாமி வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி சந்தை வளாகத்திலுள்ள வர்த்தகர்களால் சுகாதாரச் சீர்கேடு

## ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதார பகுதியினர் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் வர்த்தகர்கள் சந்தை வளாகத்தினுள் கொட்டும் கழிவுகளால் பொருட்களை நுகர வருவோர் முதல் ஏனையவர்கள் வரை பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவிக்கிறார்கள்.

கிளிநொச்சி பொதுச் சந்தையில் கரைச்சி பிரதேச சபையினரால் ஒவ்வொரு கடைகளுக்கும் கழிவு பொருட்களை கொட்டுவதற்கென குப்பை வாளிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அதிகமான வர்த்தகர்கள் கழிவுப் பொருட்களை சந்தை வளாகத்திற்குள்ளும் வடிகால்களிலும் பொது இடங்களிலும் கொட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அன்றாடம் மக்கள் கூடும் சந்தையில் இக்கழிவுகளில் இருந்து எழும் துர்நாற்றம், ஈ தொல்லை போன்றவற்றால் பொதுமக்களும் சந்தை வியாபாரத்தில் ஈடுபடுவோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வெளியில் கொட்டப்படும் கழிவுகளை கால்நடைகள் அங்குமிங்குமாக இழுத்து சிந்திச் சிதறுவதால் துர்நாற்றத்துடன் சுகாதாரக் கேடும் ஏற்பட்டுள்ளது. அவ் விடத்திற்கு வரும் காகங்கள் அவற்றினை எடுத்து அயல் வீடுகளில் உள்ள கிணறுகளிலும் வீட்டு வளாகத்தினுள்ளும் கொண்டு சென்று போடுவதால் கிணற்று நீர் தொடக்கம் சுற்றுச்சூழல் மாசுபடுவதற்கு ஏதுவாக அமைவதாகவும் பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

கொட்டப்படும் கழிவுகள் கரைச்சி பிரதேச சபையினரின் சுகாதார சுத்திகரிப்பு பணியாளர்களால் தினமும் இரு தடவைகள் வாகனங்கள் மூலம் வெளியே எடுத்துச் செல்லப்படுகிறது.

இவ்வாறு இருந்தும் இதனை கருத்திற் கொள்ளாத வர்த்தகர்களுக்கு இது தொடர்பாக சுகாதார பணியாளர்களால் அறிவுறுத்தப்பட்டும் அவர்கள் அதனை கேட்காது அசண்டையீனமாக இருப்பதாக அவர்களால் தெரிவிக்கப்படுகிறது. அவர்களுக்கு வழங்கப்பட்ட குப்பை வாளிகளுக்குள் கழிவுகளைப் போட்டால் சுகாதார சீர்கேடு இன்றி கழிவுகளை ஒழுங்கு முறையில் அகற்றுவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதை சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்கள் வர்த்தகர்களை கேட்டுக் கொள்கின்றனர்.

எனவே சந்தை வளாக வர்த்தகர்கள் இதனை கருத்திற்கு கொண்டு சூழலுக்கு மாசு ஏற்படுத்தாதவாறு தமது குப்பைகளை வழங்கப்பட்டுள்ள குப்பை வாளியினுள் இட்டு வைத்தால் அகற்றுவதற்கு இலகுவாக இருக்குமென சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்களால் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (2-271)

# நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பெரியகுளம் கிராம சேவையாளர் பிரிவில் கட்டைக்காடு கிராம அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் தலைவராக க.மகேந்திர ராஜா, செயலாளராக ப.தயாணந்தன், பொருளாளராக ம.யோகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் 11 பேர் உறுப்பினர்களாகத் தெரிவாகினர். குறித்த சங்கம் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அதன் செயற்பாடுகள் முன்னேற்றம் காணப்படாத நிலையில் காணப்பட்டன.

இதனையடுத்தே இவ்வாண்டு புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பஸ்தரின் காதை வெட்டிய குடும்பஸ்தருக்கு விளக்கமறியல்

குடும்பஸ்தர் ஒருவரின் காதினை வாளால் வெட்டி துண்டித்த மற்றொரு குடும்பஸ்தரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

உறவினர்களான இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே குடும்பஸ்தர் ஒருவர் குறித்த குடும்பஸ்தரின் காதை வாளால் வெட்டியுள்ளார்.


இச்சம்பவம் துன்னாலை சக்குச்சம்பா பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த சின்னத்துரை-நகேந்திரன் (வயது-48) என்பவரே காது அறுபட்ட நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றனர். இருப்பினும் குறித்த சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நேற்று சனிக்கிழமை பருத்தித்துறை பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதவான் நடராஜா உத்தரவிட்டுள்ளார். (இ-60)




## யாழ்.போதனா வைத்தியசாலை

# கண்ணியற் பிரிவிற்கு 15 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன கருவிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண்ணியல் பிரிவிற்கு அவுஸ்திரேலிய மருத்துவ நிதியமும் அவுஸ்திரேலிய ரோட்டரி கழகமும் இணைந்து சுமார் 15 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன கருவிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

இது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் பதில்பணிப்பாளர் வைத்திய கலாநிதி.ஸ்ரீ.பவானந்தராஜா தெரிவிக்கையில்,

Yag lasar எனும்நவீனகருவியானது லேசர் சிகிச்சைக்கு பயன்படும் உபகரணமாகும். இவ்உபகரணம்கொழும்புகண் வைத்தியசாலையில் மட்டுமே இருந்தமையால் நோயாளர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் கொழும்பு சென்றே சிகிச்சை பெறவேண்டி இருந்தது.

அவுஸ்திரேலியா ரோட்டரி கழகத்தூடாக வழங்கப்பட்ட இக் கருவிகள் மூலம் யாழ்ப்பாணத்திலேயே சகல கண் சிகிச்சைகளும் வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



ஏற்கனவே இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் வழங்கப்பட்ட கண் சத்திர சிகிச்சை உபகரணங்களுடன் பூரணமான கண் சிகிச்சைப்பிரிவு இயங்க முடியும் என வைத்தியசாலை நிர்வாகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும் அடுத்த கட்டமாக குழந்தைகள் கண் நோய் தொடர்பாக கண்டறியும் ஸ்கானர் இயந்திரமும் உள்ளது.

இதன்மூலம் குழந்தைகளின் கண்நோய் மற்றும் குளுக்கோமா போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்கமுடியும்.

கண் வைத்திய நிபுணர் டாக்டர் எம்.மலரவனின் முயற்சியில் அவரின் கோரிக்கையின் பேரில் மேற்படி உபகரணம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்த உபகரணத்தை வழங்கியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பில் கண் வைத்திய நிபுணர் வைத்தியர் எம்.மலரவன் கூறுகையில்,

வடமாகாணத்தில் 10 இலட்சம் பேருக்கு இரு மருத்துவ இயந்திரங்கள் போதும். இவ இயந்திரம் இல்லாவிட்டால் வவுனியா அல்லது கண்டிக்கு செல்ல வேண்டியேற்படும்.

கண்பார்க்கும்லாம்புபோன்ற மருத்துவ உபகரணங்களும் வெளிநாடுகள் வழங்கிக்கொண்டு உள்ளன. அதேபோன்று கண் ஸ்கானர் இங்கு இல்லை. அதுவும் வழங்க முன் வந்துள்ளனர்.

இவர்களின் இரண்டாவது வேலைத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களிற்கு முதற் கட்டமாக 200 பேருக்கு கண் வில்லைகள் பொருத்தும் நடடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கண் தெரியாத, பார்வை குறைந்த மாணவர்களிற்கு பாடப்புத்தகங்கள் தமிழ் மொழியில் இல்லை. அதனை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கண்தெரியாததமிழ் மாணவர்களிற்கு தரம் ஒன்று முதல் உயர்தரம் வரை சுயமாக படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# பிரச்சினைகளைத் தீர்க்க விபரங்களை கொடுங்கள்

## யாழ்.வணிகர் கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நுகர்வு பொருட்களை விநியோகிக்கும் அல்லது சந்தைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள வர்த்தக நிறுவனங்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக அறிவிக்கப்பட்டிருப்பதால் இப்பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இவ்வாறான விநியோகத்தர்கள் அல்லது சந்தைப்படுத்துவோர் விபரங்களையும் மற்றும் நிறுவனங்களினதும் பிணக்குகள் பற்றிய விபரங்களையும் பெற்றுக்கொள்வதற்கு யாழ்.வணிகர் கழகம் தீர்மானித்துள்ளது.

எனவே யாழ்.வணிகர் கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் விபரங்கள் பதிவு செய்து வணிகர் கழகத்தில் ஒப்படைக்கும் வணிகர் கழகம் அனைத்து விநியோகத்தர்களையும் அல்லது சந்தைப்படுத்துவோர்களையும் கேட்டுக்கொள்வதாக அக் கழகத்தின் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ)

# நின்ற பஸ்ஸை வந்த பஸ் மோதியது

(இமையாணன்)

நிறுத்தி வைக்கப்பட்டு பயணிகளை ஏற்றிக் கொண்டிருந்த தனியார் மினி பஸ் ஒன்றுடன் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அரச பேருந்து மோதி விபத்துக்குள்ளாகியது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் அச்சுவேலி ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கு செல்லும் 750 வழித்தட பேருந்துகளே ஒன்றையொன்றுமுந்திச்செல்ல முற்பட்ட வேளை இவ்வாறு விபத்துக்குள்ளானது.

திடீரென நிறுத்தி பயணிகளை ஏற்றிக் கொண்டிருந்த மினி பஸ் மீது வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையிலேயே அரச பேருந்து மோதியுள்ளது. இதனால் மினி பஸ் பின் பகுதி சேதமாக்கப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது. (இ-32)

# கடலும் கிழவனும் திரைப்பட வெளியீடு

(தும்பளை)

பருத்தித்துறை ஞானாலயத்தின் திரைப்பட வட்டம் ஒழுங்கு செய்துள்ள யாழ்.பிரான்ஸ் நட்புறவுக் கழகத்தின் கடலும் கிழவனும் எனும் ஆங்கிலத் திரைப்பட வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஞானாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினராக யாழ்.பிரான்ஸ் நட்புறவுக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஜெரால்ட் றொபுன்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-19)

# முக்கொலைச் சந்தேகநபருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது

யாழ்.அச்சுவேலி கதிரிப்பாயில் கடந்த மே மாதம் 4 ஆம் திகதி இடம்பெற்ற முக்கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா, நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது உத்தரவிட்டார்.

யாழ்.அச்சுவேலி கதிரிப்பாய் பகுதியில் கடந்த மே மாதம் 4 ஆம் திகதி அதிகாலை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மகள் ஆகிய மூவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

நிற்குணானந்தன் அருள்நாயகி (50) யசோதரன் மதுசா (27) நிற்குணானந்தன் சுபாங்கன் (19) ஆகிய மூவரும் பலியாகியிருந்ததுடன் தனஞ்செயன் தர்மிகா (25), க.யசோதரன் (30) ஆகிய இருவரும் படுகாயமடைந்திருந்தனர்.

இம்முக் கொலை தொடர்பில் படுகாயமடைந்த தர்மிகாவின் கணவரான பொ.தனஞ்செயன் ஊரெழு பகுதியில் வைத்து கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கொலையுண்ட மதுசாவின் கணவரான யசோதரன் கொலையாளியான தனஞ்செயனின் மனைவி தர்மிகா ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் கொலைகளை நேரில் கண்டதாகச் சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர்.

அம்மன் நோயால் பாதிக்கப்பட்டிருந்த முக்கொலைச் சந்தேகநபர் கடந்த முதலாம் திகதி வழக்கு விசாரணை இடம்பெற்ற போது கலந்து கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)







நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வாசுகி சுவாமிநாத சர்மா மற்றும் நந்தினி ஆகியோரின் பக்திப்பாடல் என்பன நேற்று முன்தினம் நல்லை ஆதீன தெய்வீக அரங்கில் நடைபெற்றபோது. (படம் :- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தவனத்தில் ஓர் ஆண்டி
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி–மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி–கடுவெளிச்சித்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நித்திய பூசை உங்களுக்கு மஹோற்சவம் எங்களுக்கு

விரும்பியோ விரும்பாமலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் குரல் கொடுத்தாக வேண்டும். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, வடக்கு மாகாண சபையின் ஆட்சி என்பன தமிழ் மக்களின் பிரதிநிதித்துவமாகக் கருதப்படக் கூடியவை.

அந்த வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே சர்வதேச சமூகத்துடன் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை குறித்து பிரஸ்தாபிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

இந்நிலையில் கூட்டமைப்பு தெளிவான – புரியக் கூடியதான தீர்வை வரையறை செய்து கொள்வது அவசியமாகும். அமெரிக்காவுடன் பேசினால் என்ன? இந்தியாவுடன் கதைத்தால் என்ன? ஒரே விடயத்தை – ஒரே தீர்வை – ஒரே அணுகுமுறையை முன்வைப்பது அவசியம்.

அதேநேரம் இத்தகைய முக்கியமான சந்திப்புக்களின் போது நாம் எந்த விடயத்தைக் கூறப்போகின்றோம் என்பதில் மிகத் தெளிவான ஒழுங்குபடுத்தல்கள் இருப்பதும் அவசியமாகும்.

கூறியதைக் கூறல், ஒருவர் கூறியதை இன்னொருவர் முரண்பாட்டுடன் திரும்பக் கூறல் என்பன சந்திப்புக்களைப் பிசுபிசுக்கச் செய்துவிடும்.

இத்தகைய நிலைமைகள் முன்னைய சந்திப்புக்களில் ஏற்பட்டிருந்தது என்பதையும் நாம் மறந்துவிடல் ஆகாது. இவை, சந்திப்புக்களின் போது கூட்டமைப்பு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிய ஒரு சுருக்கம்.

நாம் இங்கு பிரஸ்தாபிக்க முற்படுவதெல்லாம்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கட்சியையும் வடக்கு மாகாண அரசையும் வேறுபடுத்திச் செயற்படுவது போன்ற தோற்றப்பாடு குறித்ததாகும்.

அதாவது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் அழைத்துச் சென்றிருக்க வேண்டும்.

பிரதமர் மோடியுடனான கூட்டமைப்பின் சந்திப்பு எத்துணை முக்கியமானதோ அந்தளவிற்கு அந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் இடம்பெறுவதும் முக்கியமானதாகும்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அரசியல்வாதி அன்று. அவர் பொருத்தமான முதலமைச்சர் என்பதன் காரணமாக வடக்கு மாகாண சபைக்கு அழைத்து வரப்பட்டவர். அதற்குத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவும் வெளிப்பட்டிருந்தது. இது தவிர அவர் இலங்கை நாட்டின் நீதியரசராக இருந்தவர்.

எனவே, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர்; இந்த நாட்டின் அரசு மீது வெளிப்படுத்துகின்ற நம்பிக்கையீனங்களை விட, வடக்கின் முதலமைச்சர் முன்வைக்கும் நம்பிக்கையீனங்கள் தொடர்பில் மோடியின் கவனயீர்ப்புக்கள் காத்திரமானவையாக இருக்கும்.

இந்த உண்மைகள் சம்பந்தருக்குத் தெரியாததும் அல்ல. இருந்தும் இனப்பிரச்சினை குறித்து இடம்பெறும் சந்திப்புக்களில் வடக்கின் முதலமைச்சர் புறக்கணிக்கப்படுவது பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டு உள்ளது.

அதில் முக்கியமான இடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பு எனலாம்.

பிரதமர் மோடியைச் சந்திக்கச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சி.வி.விக்னேஸ்வரனைக் கூட்டிச் செல்லாதது ஏன்? சந்திப்பில் கலந்து கொள்ளமாட்டேன் என அவர் கூறினாரா? அல்லது மோடியுடனான சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு வடக்கின் முதல்வரை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கேட்கவில்லையா?

இந்தவிடயம் குறித்து மக்களுக்குப் பதில்கூற வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் உண்டு.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, கூட்டமைப்பும் வடக்கு மாகாண அரசும் ஒன்றே.

ஆனால் கூட்டமைப்பின் தலைமை அவ்வாறு கருதவில்லைப் போல் தெரிகிறது. அவர்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த சந்திப்புக்கள் திருவிழாப் போன்றவை. வடக்கு மாகாண அரசின் கடமை நித்தியபூசை போன்றது.

ஆக, உங்களுக்கு நித்தியபூசை. எங்களுக்கு மஹோற்சவம் என்பதைப் போல தலைவர் சம்பந்தர் செயற்படுவது தமிழ் மக்களின் அபிலாசைகளை வெல்வதற்குப் பெருந்தடையாக இருக்கும் என்பது சர்வநிச்சயம்.

# தேர்தலில் யாருக்கு ஆதரவு; செப்.நடுப்பகுதியில் அறிவிப்பு

## பொது பல சேனா

ஜனாதிபதி தேர்தலில் தமது ஆதரவு யாருக்கு என்பதை செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் பகிரங்கப்படுத்துவோம் என பொது பல சேனாவின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

சிங்கள பௌத்தர்களை பாதுகாக்கும் தேசிய தலைவரே எமது இலக்காகும் என்று தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் கொழும்பில் 3000 பௌத்த குருமார்கள் கூடும் மகா சங்க சம்மேளனத்தை நடத்தவுள்ளோம்.

இதற்கு நாடு பூராகவும் இருந்து பௌத்த குருமார்கள் கலந்து கொள்கின்றனர். இதன்போது ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்கப்படும்.

பொது வேட்பாளர் தொடர்பில் எமக்கு அக்கறையில்லை. இலங்கையில் சிங்கள பௌத்தர்களை பாதுகாக்கும் தேசிய தலைமைத்துவமே எமது இலக்காகும்.

அவ்வாறான ஒருவர் ஜனாதிபதி தேர்தல் களத்தில் குதித்தால் எமது ஆதரவை வழங்குவோம்.

இது தொடர்பில் பொது பல சேனாவின் வரைவிலக்கணம் தொடர்பில் திட்டம் தயார் செய்யப்படுகின்றது. செப்டெம்பர் மாதம் பகிரங்கப்படுத்தப்படுமென்று ஞானசார தேரர் தெரிவித்தார். (இ)

# ஐ.தே.கட்சியின் பதவிகளில் மாற்றம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான பதவிகள் சிலவற்றில் அடுத்த வாரத்தில் மாற்றங்களை மேற்கொள்ள அந்த கட்சி திட்டமிட்டுள்ளது.

வெற்றிடமாக இருக்கும் பிரதித் தலைவர் பதவி உட்பட மேலும் சில பதவிகளுக்கான நபர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

பதவி மாற்றங்களை துரிதமாக மேற்கொண்டு ஊவா தேர்தல் மேடையில் சகல தலைவர்களும் ஒன்றாக ஏறி ஐக்கியத்தை காண்பித்து கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியினர் தயாராகி வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் பதவியை சஜித் பிரேமதாசவுக்கு வழங்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முழுமையான இணக்கத்தை வெளியிட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. (எ-11)

# 35 யுவதிகள் வெளியேறினர்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்ட 35 தமிழ் யுவதிகள் நேற்று பயிற்சிகளை முடித்து வெளியேறினர்.

பயிற்சிகளை முடித்துக் கொண்ட தமிழ் யுவதிகளின் அணி வகுப்பு மரியாதை திருகோணமலை 22-வது படைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

பிரிகேடியர் ஆர்.சண்முகநாதன் அணி வகுப்பு மரியாதை ஏற்றுக் கொண்டார்.

பயிற்சிகளை முடித்து வெளியேறும் தமிழ் யுவதிகள் கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். (எ-11)

# கடலில் மூழ்கி சிறுவன் பலி


(கொழும்பு)

தங்கல்லை, கபுஹேன்வல கடற்பிரதேசத்தில் குளிப்பதற்காக தந்தையுடன் சென்ற சிறுவனொருவன் கடலில் மூழ்கி பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

6 வயதுடைய சிறுவனே இவ்வாறு கடலில் மூழ்கி பலியாகியுள்ளான்.

மேலும் சிறுவனுடன் கடலில் மூழ்கிய அவனது சகோதரர் (வயது 12) மீட்கப்பட்டுள்ளதாகவும் தங்கல்லை பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



## எங்கள் குருநாதன்

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள் நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருலுகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**24.08.2014 இற்கான வினா**
**சின்மயா மிஷனின் நோக்கம் யாது?**
**23.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**
**மனிதரிடம் இருக்கின்ற அற்புதமான கருவி மனம்.**
**எனவே மனம் என்றால் என்ன?**
**எண்ணங்களின் ஓட்டம் மனம் என்று சொல்லப்படும்.**

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

# "எம் சொந்த அனுபவத்தில் இயேசுவை உணர்வோம்"

"நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?" "நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?" என்று இயேசு இரு கேள்விகள் கேட்கும் பகுதி இன்று எமக்கு பைபிளில் தரப்படுகிறது.

நம்முடைய் வாழ்க்கையில் நம்மை நாமே தேடிய அனுபவங்கள் நமக்கு உண்டு. நம்மை நாமே தேடும் நேரங்களில் பல கேள்விகள் நம் உள்ளத்தில் எழுந்திருக்கும். அவற்றில் மிக முக்கியமாக நம் மனதில் எழும் ஒரு கேள்வி: "நான் யார்?" என்ற கேள்வி. இயேசுவுக்கும் இந்தக் கேள்வி எழுந்தது.

"நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?" இயேசு இக்கேள்வியை அவர் காலத்து மக்களிடம் மட்டுமல்ல. இன்றும் கேட்கிறார். மக்கள் இயேசுவைப்பற்றி என்ன சொல்கிறார்கள்? என்னென்னவோ சொல்லிவிட்டார்கள். இன்னும் சொல்லி வருகிறார்கள். நல்லதும், பொல்லாததும உண்மையும், பொய்யும், விசுவாசச் சத்தியங்களும், கற்பனைக்

**பரமபிதா காட்டிய பாதை**

கதைகளும் என அளவுக்கதிகமாகவே சொல்லிவிட்டார்கள். ஆனால், இவ்வளவு சொல்லியும் இயேசுவைப்பற்றி முழுமையாக நம் மனித குலம் சொல்லிவிட்டதா என்று கேட்டால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இயேசு இவர்தான், இப்படிப்பட்டவர்தான் என்று சொல்வது மிகக் கடினம். மனித மகத்துவத்திற்கெதிரான இலக்கணங்களை, வரையறைகளை, வேலிகளை தடைகளை உடைப்பது இயேசுவின் இலக்கணம். இயேசுவின் அழகு. "நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?" என்ற கேள்விக்கு நம் [illegible] எமது கேள்வி ஞானத்தைக் கொண்டு பதில் சொல்லிவிடலாம்.

ஆனால், "நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?" என எம்மைப் பார்த்து இயேசு கேட்கிறார். இந்த இரண்டாவது கேள்விக்கு அப்படி எளிதாக நாம் பதில் சொல்லிவிட முடியாது. நாம் படித்தவற்றைவிட, பட்டுணர்ந்தவையே இக்கேள்விக்குப் பதிலாக வேண்டும். நாம் மனப்பாடம் செய்தவற்றை விட, மனதார நம்புகிறவையே இக்கேள்விக்கான பதிலைத் தரமுடியும். இக்கேள்வி எமக்கு சங்கடங்களை உருவாக்கலாம். "என்ன இது. என்ன சொல்வது என புரியவில்லை என உணர்ந்தால், இது ஒரு நல்ல ஆரம்பம். இயேசுவின் இந்தக் கேள்வி வெறும் கேள்வி அல்ல ஓர் அழைப்பு. "என்னைப்பற்றிப் புரிந்து கொள், என்னைப் பற்றிக்கொள், என்னைப் பின்பற்றி வா" என்று பலவழிகளில் இயேசு விடுக்கும் அழைப்பே இதுவாகும். என்னைப பின்பற்றுகிறவன் ஒருபோதும் இருளில் நடவான்.

இயேசுவை பற்றிய வெறும் புத்தக அறிவு மட்டும் போதாது. அப்படியான ஒரு அறிவு கடவுளைக் கோவிலில் வைத்துப் பூட்டி மறைத்து விடுவது போன்றதேயாகும். ஆனால் இயேசுவை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டால் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்படும். பல சவால்களைச் சந்திக்க வேண்டும். நம் மனதைக் கவர்ந்த ஒருவரை, கருத்தளவில் புரிந்துகொள்வதோ, அவரைப் புகழ்வதோ எளிது. அவரைப் போல வாழ்வதோ, நம்பிக்கையோடு அவரைத் தொடர்வதோ எளிதல்ல.

இயேசுவைப்பற்றி தெரிந்துகொள்ள, அவரைக் கண்டு பிரமித்துப் போக, அவரை [illegible] கேள்வி அறிவு, புத்தக அறிவு போதும். அந்த பிரமிப்பில் நாம் இருக்கும்போது, இயேசு



நம்மிடம் "நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?" என்று கேட்டால், நம் பதில்கள் ஆர்வமாய் ஒலிக்கும். ஆனால, அந்த பிரமிப்பு, ரசிப்பு இவற்றோடு மட்டும நாம் இயேசுவை உலகறிய பறைசாற்றக் கிளம்பினால், புனித பவுல் சொல்வது போல், "ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும் போலாவோம்." எனவே, இயேசு நம்மை அடுத்த நிலைக்கு வருவதற்கு கொடுக்கும் அழைப்பு தான் "நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?" என்ற கேள்வியாக எழுகிறது. இது சாதாரண அழைப்பு அல்ல. அவரை நம்பி அவரோடு நடக்க, அவரைப் போல் நடக்க, இரவானாலும், புயலானாலும் துணிந்து நடக்க அவர் தரும் ஓர் அழைப்பு. வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த கொடுககப்படும் இந்த அழைப்பிற்கு, மனதின் ஆழததிலிருந்து நம் பதில்களை வரவழைப்போம.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

இயேசுவின் இந்த அழைப்பைப் புரிந்தும் புரியாத , சீமோன்: " நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று பதிலளித்தார். இயேசுவுடன் தட்டுத் தடுமாறி நடை பயின்ற பேதுரு, இயேசுவைத் தம் சொந்த அனுபவத்தில் சந்தித்தபின், இறுதி மூச்சு வரை உறுதியாய் இருந்ததுபோல், நாமும், சொந்த அனுபவத்தில் இயேசுவை உணர்ந்து, அவருக்காக எதையும் இழக்கும் துணிவு பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா
## சிறப்புமலர்-24.08.2014

After A/Level's

3 Year UK Degrees

LONDON metropolitan university

UGC Recognized University






DiTEC INTERNATIONAL Diploma in Information Technology Duration 4 Months

DiE Diploma in English Duration 4 Months

DiSE Diploma in Software Engineering Duration 6 Months

DiWE Diploma in Web Engineering Duration 6 Months

DiCA Diploma in Computerized Accounting Duration 5 Months

DiBM Diploma in Business Management Duration 4 Months

2014 செப்டம்பருக்கான பதிவுகள்
உயர் தர பெறுபேறுகளுக்காக காத்திருப்போரும் இணையலாம்

Bsc (Hons) in Computing

BEng (Hons) in Software Engineering

BA (Hons) in Business Administration

அனைத்தும் உள்ளடங்கிய கட்டணம் : ரூ. 250,000/- (வருடாந்தம்)

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

assured by edexcel

பிரித்தானிய EDEXCEL நிறுவனத்தினால் தரத்தினை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் பாடநெறிகளின் முடிவின்போது EDEXCEL சான்றிதழ் வழங்கப்படும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 011-7555545 | வத்தளை | 011-7555530 | குளியாப்பிட்டி | 037-2284621 | இரத்தினபுரி | 045-2230005 |
| கண்டி | 081-2204400 | கல்முனை | 067-3673555 | மினுவாங்கொடை | 011-2280770 | திருகோணமலை | 026-7267200 |
| குருநாகல் | 037-2223945 | கேகாலை | 035-2222045 | மொனராகலை | 055-2055444 | வவுனியா | 024-7694050 |
| நீர்கொழும்பு | 031-2227990 | கிளிநொச்சி | 021-2285444 | நாவலப்பிட்டி | 081-5633725 | வென்னப்புவ | 031-2252520 |
| மாத்தறை | 041-2233550 | ஹட்டன் | 051-7388053 | அநுராதபுரம் | 025-5670513 | பாணந்துறை | 038-7389040 |
| காலி | 091-7501125 | ஹோமாகம | 011-2891675 | பண்டாரவளை | 057-2224042 | களுத்துறை | 034-7388050 |
| கம்பஹா | 033-7388051 | அம்பாந்தோட்டை | 047-2220940 | எம்பிலிப்பிட்டி | 047-2261845 | அம்பலாங்கொட | 091-5704504 |
| யாழ்ப்பாணம் | 021-2224142 | கிரிபத்கொட | 011-7555535 | அவிசாவளை | 036-2230332 | சிலாபம் | 032-2222577 |
| மட்டக்களப்பு | 065-7200070 | பத்தரமுல்ல | 011-4932293 | நுவரெலியா | 052-7755400 | நாரம்மல | 037-7526560 |
| மாத்தளை | 066-7501122 | ஜா-எல | 011-2229766 | தெல்லிப்பழை | 021-2264940 | பதுளை | 055-7796957 |
| நுகேகொட | 011-7555571 | பிலியந்தலை | 011-2608672 | பொலன்னறுவை | 027-7501130 | கெக்கிராவ | 071-4084040 |

ESOFT Shaping Lives, Creating Futures.

No.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 4142 Hotline : 077 309 9 308

ESOFT METRO CAMPUS
இலங்கையின் பாரிய உயர் கல்வி வலையமைப்பு
www.esoft.lk

Follow us on
facebook.com/ESOFTMetroCampus
www.twitter.com/esoftsrilanka

Shaping Lives, Creating Futures. ESOFT.lk

# உ.பி.யில் பலி எண்ணிக்கை 100 ஆக நேற்று உயர்வு

உத்தரப்பிரதேச மாநிலத்தின் மத்திய மாவட்டப் பகுதியில் ஒரு வாரமாக மழை பெய்து வருகிறது. இதனால் பஹாராய்ச், கோண்டா, பல் ராம்பூர், ஷராவதி, சீதாபூர், கோரக்பூர், பாஸ்தி போன்ற மாவட்டங்களில் கடும் யான வெள்ளச்சேதம் ஏற்பட்டுள்ளது.

பஹாராய்ச் மாவட்டத்தில் வெள்ளத்தில் புகையிரதத் தண்டவாளம் சேதம் அடைந்ததால் வடகிழக்கு பகுதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு பாதைகளை சீரமைக்கும் பணியில் புகையிரத ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ராப்தி, காக்ரா, சராயு நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் கரை பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

சீதாபூர் மாவட்டத்தில் 200 இற்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் மழைக்கு 7 பேர் பலியானார்கள். இதையடுத்து உத்தரபிரதேசத்தில் மழை வெள்ளத்துக்கு பலியானவர்கள் எண்ணிக்கை 100ஐ தாண்டியது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளை உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் ஹெலிகொப்டரில் பார்வையிட்டார். மாநில அரசுக்கு வெள்ள நிவாரணத்துக்கு தேவையான உதவிகளை மத்திய அரசு செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக ராஜ்நாத்சிங் மாநில அரசு அதிகாரிகளுடன் வெள்ளச்சேதம் பற்றி ஆலோசனை நடத்தினார். இதில் வாரணாசி மற்றும் கோரக்பூர் பகுதிக்கு வெள்ள மீட்பு குழுவைச் சேர்ந்த 2 படைகளை கூடுதலாக அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டது. (இ)

### எபோலா நோய் எதிரொலி
# செனகல் நாடு தனது எல்லையை மூடியது

'எபோலா' என்ற கொடிய வைரஸ் காய்ச்சல் நோய் மேற்கு ஆபிரிக்க நாடுகளான கினியா, சியர்ரா லோன், நைஜீரியா, லைபீரியா ஆகிய 4 நாடுகளில் வேகமாக பரவி வருகிறது.

இந்த நோயை குணப்படுத்த மருந்து எதுவும் இன்னும் அதிகாரபூர்வமாக கண்டு பிடிக்கவில்லை. எனவே இதை உயிர்க் கொல்லி நோய் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கிடையே இந்த நோய் தாக்கி லைபீரியா, கினியா, நைஜீரியா, சியர்ரா லோன் ஆகிய நாடுகளில் இதுவரை ஆயிரத்து 350 பேர் பலியாகி உள்ளனர். எனவே, இவற்றை சுற்றியுள்ள அண்டை நாடுகள் 'எபோலா' நோய் பரவாமல் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றர்.

இது தொடர்பாக தங்கள் நாட்டு எல்லைகளை மூடிவிட்டனர். 'எபோலா' நோய் பரவி வரும் 4 மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இருந்து, விமான சேவையையும் இரத்து செய்துவிட்டன.

இந்தநிலையில் கினியா நாட்டின் அருகே இருக்கும் செனகல் நாடும் தனது எல்லையை மூட நேற்று முடிவு செய்தது. இந்த அறிவிப்பை அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. (இ)

# புலனாய்வாளர்கள் 11 பேர் படுகொலை

இஸ்ரேல் நாட்டிற்கு புலனாய்வாளர்களாக செயற்பட்டதாகக் கூறி 11 பேரை ஹமாஸ் போராளிகள் படுகொலை செய்துள்ளனர்.

காஸாவின் தெற்குப் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் விமான தாக்குதல் நடத்தியதில், ஹமாஸ் இயக்கத்தின் 3 கொமாண்டர்கள் கொல்லப்பட்டனர். தங்கள் இயக்கத்தின் தலைவர்களை குறிவைக்கும் இஸ்ரேலை பழிதீர்ப்பதாக ஹமாஸ் சபதம் செய்தது.

இந்நிலையில், நேற்று அதிகாலை 11 பேரை புலனாய்வாளர்கள என்று காஸா நகர பொலிஸ் தலைமையகத்தில் வைத்து கொன்றதாக பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறினார். இவர்கள் 11 பேரும் ஏற்கனவே காஸா நீதிமன்றங்களால் தண்டனை பெற்றவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் உளவுத்துறையுடன் தொடர்பில் இருந்த இவர்கள், ஹமாஸ் தலைவர்களின் இருப்பிடம் பற்றி தகவல் தெரிவித்து வந்ததாகவும் கூறப்படுகிறது. (இ)

# தங்க சுரங்கம் இடிந்ததில் 25 பேர் நிலத்தில் புதைந்தனர்

(பம்பாரி)

ஆபிரிக்கா கண்டத்தில் மத்திய ஆபிரிக்க குடியரசு நாடு உள்ளது. இங்கு அதிக தங்க சுரங்கங்கள் உள்ளன. இந்த நிலையில் அங்கு பம்பாரி அருகே மலைகள் சூழ்ந்த வனப் பகுதியில் தங்க சுரங்கம் உள்ளது.

கனடாவை சேர்ந்தவருக்கு சொந்தமான இந்த சுரங்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இதற்கிடையே இந்த தங்க சுரங்கம் நேற்று முன்தினம் திடீரென இடிந்து புதைந்தது.

அதில், 27 பேர் மண்ணில் புதைந்தனர். தகவல் அறிந்ததும் அங்கு மீட்பு பணி தீவிரமாக நடந்தது. இருந்தும் 25 பேரை சடலமாக மீட்கவே முடிந்தது. மேலும் 2 பேரை மீட்கும் முயற்சி நடக்கிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா கிரிக்கெட் III

## பற்றீசியன்ஸ்- சென்றலைட்ஸ் இன்று பலப் பரீட்சை







சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III இன யாழ்.நகரில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்கான கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பற்றீசியன்ஸ் அணியை எதிர்த்து யாழ்.சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணி சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான 2-வது சுற்றுக்கு தகுதி பெறவுள்ளது.

தகுதி பெறும் அணி மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட கழக அணிகளுடன் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பித்தக்கது. (க)

# பாகிஸ்தான் வெற்றி




இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி இரண்டு டெஸ்ட் போட்டிகள் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடுகின்றது.

இரு அணிக்குமிடையிலான ஒரு நாள் போட்டித் தொடருக்கான முதல் போட்டி நேறறு ஹம்பாந்தோட்டை - சூரியவெவ மைதானத்தில் இடம் பெற்றது.

சீரற்ற காலநிலையால் நேற்றைய போட்டி தாமதாக ஆரம்பிக்கப்பட்டமையால், 50 ஓவர்கள் போட்டி 45 ஓவர்களாகவும் குறைக்கப்பட்டிருந்தது.

நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பாட களமிறங்கிய இலங்கை அணி சார்பில் அஞ்சலோ மத்தியூஸ் 89 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 63 ஓட்டங்களையும் விளாச 45 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை.




பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் வஹாப் ரியாஸ் 3 விக்கெட்டுக்களையும் மொஹமட் இர்பான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதன்படி 276 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 44.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களைப பெற்று நான்கு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தான் அணி சார்பாக சொஹிப் மசூட் 89 ஓட்டங்களையும் பாவட் அலாம் 62 ஓட்டங்களையும் பெற்றனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் சொஹிப் மசூட் தெரிவு செய்யப்பட்டார். (க)

# தமிழருக்கு அரசியல்...

புதுடில்லிக்கு இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்டு சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேறறு சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இந்நிலையில் இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் நாம் இலங்கைப் பிரச்சினை குறித்த பல்வேறு விடயங்களை விரிவாகப் பேசினோம். இந்தச் சந்திப்பு எமக்கு திருப்திகரமாக அமைந்தது.

எங்கள் கருத்துக்களை கேட்டறிந்த அவர், எனது பிரதமர் பதவியேற்பு நிகழ்வுக்கு வந்திருந்த இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து நான் தெளிவாக விளக்கியிருந்தேன். அவரும் அதை நன்றாக உணர்ந்திருக்கிறார் என்று நரேந்திர மோடி தெரிவித்தார்.

அத்துடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் காத்திரமான நடவடிக்கையை எடுக்க இந்தியா கரிசனையுடன் செயற்படும். 13-வது திருத்தச் சட்டமூலத்தில் குறிக்கப்பட்ட அதிகாரங்களிலும் கூடுதல் அதிகாரங்களை இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்திய அரசு கொழும்பிடம் வலியுறுத்தும். இதற்காக இலங்கை அரசாங்கத்துடன் நாம் பேசுவோம்.

அதேவேளை தமிழ் அரசியல் தலைவர்களும் இந்தியாவுடன் தொடர்பு கொண்டு தமது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். வடமாகாண முதலமைச்சரை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் நரேந்திர மோடி எம்மிடம் தெரிவித்தார் என்று சம்பந்தன் மேலும் கூறியுள்ளார்.

இதனிடையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் மற்றும் இந்தியாவின் முன்னாள் பிரதமரும் காங்கிரஸ் கட்சியின் மன்மோகன் சிங் ஆகியோரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுமுன் தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## முன்னாள்...

இந்தப் பேச்சுவார்த்தையின் போது வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை மீறிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும் கூட்டமைப்பினர் விளக்கிக் கூறியுள்ளார்.

இதேபோல் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் முன்னாள பிரதமர் மன்மோகன் சிங்கை கூட்டமைப்பினர் சந்தித்து இலங்கை நிலைவரம் தொடர்பிலும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துக் கூறியுள்ளனர். (எ-11)

## விக்...


திட்டப் பணிகள் என்ற பெயரில் அந்நிய சக்திகளின் ஊடுருவல் காரணமாக அச்சம் ஏற்பட்டுள்ளதாக கூறியதாகவும் தெரிவித்தார். (எ-11)

# டெஸ்ட் போட்டிகளுக்கு தோனி சிறந்த தலைவர்

## ஸ்ரீபன் பிளமிங்

டெஸ்ட்தலைமைக்குதோனிபொருத்த மானவர என நியூசிலாந்து முன்னாள் அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் கூறியுள்ளது.

இங்கிலாந்து எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி 1-3 என்ற கணக்கில் மோசமாக தோற்றது.



இதனால் பல்வேறு தரப்பில் இருந்து கண்டனங்களை இந்திய வீரர்கள் பெற்று வருகிறார்கள். குறிப்பாக தோனி டெஸ்ட் கப்டன் பதவிக்கு பொருத்தமானவர் இல்லை என்று முன்னாள் வீரர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் தோனி டெஸ்ட் கப்டனுக்கு பொருத்தமானவர்தான் என்று நியூசிலாந்து முன்னாள் கப்டன் ஸ்ரீபன் பிளமிங் தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது,

தோல்வியால் தோனி நெருக்கடியில் இருக்கிறார். ஆனால் என்னை பொறுத்தவரை டெஸ்ட் கப்டன் பதவிக்கு அவர் பொருத்தமானர். நெருக்கடியில் சிறப்பாக செயல்படும் திறமை அவருக்கு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார். (க)

## 6 ஆயிரம்...

கர் வீடமைப்புத் திட்டம் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்பு தொகுதி வளலாய் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட உள்ளது. இராணுவத்திற்காக சுவீகரிக்கப்பட்ட பல நிலங்கள் வெற்று நிலங்களாக காணப்பட்டவை.

போர் நடைபெற்ற காலத்தில் இந்த நிலங்களில் இருந்த மக்களை விடுதலைப் புலிகள் விரட்டியிருந்தனர் எனவும் அரசாங்கம் சுவீகரித்துள்ள சகல காணிகளுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் எனவும் இதற்காக 400 மில்லியன் ரூபாவுக்கும் மேல் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்திற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள நிலத்தில் நிர்மாணிக்கப்படும் வீடமைப்பு தொகுதியில் இராணுவத்தினரின் குடும்பங்கள் குடியேற்றப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## ஜெயாவை...

நலனுக்காக இந்தியப் பிரதமரை சந்திக்கும் நீங்கள், தமிழகத்தின் அரசியல் தலைவர்களின் தலையீட்டை வேண்டாம் என்று மறுப்பது ஏன் என்று சம்பந்தனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த சம்பந்தன், நாங்கள் யாரையும் வெறுக்கவில்லை, தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் மற்றும் மக்களின் பங்களிப்பைமுழுமையாக வரவேற்போம் என்றார்.

இந்திய மக்களவைத் தேர்தலுக்குப் பின்னர் தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற வெற்றிக்கு வாழ்த்துக் கூறி தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதிய போதே, நேரில் சந்திக்க விருப்பம் தெரிவித்ததாகவும், அதன் பின்னர் தற்போது வரை சந்திப்பு தொடர்பான பதிலுக்கு காத்திருப்பதாகவும் தெரிவித்தார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா...

தாக ஜனாதிபதிக்கு நெருக்கமான நண்பர் ஒருவர் கூறியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியின் இம்முறை அமெரிக்க பயணம் தொடர்பாக ராஜபக்ஷ குடும்பத்தினர் அமைதியாக இருந்தமை பல கேள்விகளை எழுப்பியுள்ளதாக இணையத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா செல்ல தயாராக இருப்பதாக ஜனாதிபதியின் செயலகம் ஏற்கெனவே அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது. (எ-11)

# எதிர்க்...

அறுவடை செய்தல், பொதுமக்கள் மத்தியில் வாக்களிப்பில் ஆர்வமின்மையத் தூண்டுதல் என்பன தற்போதைக்கு ஆளுங்கட்சி முன்னெடுத்துள்ள பிரதான திட்டங்களாகும்.

ஆளுங்கட்சி மேற்கொண்ட சூழ்ச்சிகளின் பலனாக எதிர்க்கட்சி பொது வேட்பாளர் திட்டம் தற்போதைக்கு கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. அதற்குப் பதிலாக ரணில் விக்கிரமசிங்க, அனுரகுமார திசாநாயக்க, சரத்பொன்சேகா ஆகியோர் அவரவர் கட்சிகளின் சார்பிலும், மாதுளுவாவே சோபித தேரர் பௌத்த வாக்குகளை குறிவைத்தும் களமிறங்கவுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சார்பிலான ஒரு வேட்பாளரை முன்னிறுத்தி ஆளுங்கட்சியின் அதிருப்தி வாக்குகளை எதிர்க்கட்சிகள் அறுவடை செய்து கொள்ளாமல் தவிர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

இவ்வாறாக எதிர்க்கட்சிகளின் சார்பில் கூடுதலான வேட்பாளர்கள் களமிறங்கும் போது எதிர்க்கட்சி வாக்குகள் சிதறி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றி இலகுவாக உறுதிப்படுத்தப்படும் என்று ஆளுங்கட்சி எதிர்பார்க்கின்றது.

எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்தும் ஆளுங கட்சியின் சதித்திட்டத்துக்கு அமைவாக தற்போதைய நிலையில் ஊடகங்களும் பயன்படுத்தப்படுகின்றன. எதிர்வரும் நாட்களில் பொது அமைப்புகளைப் பயன்படுத்தியும் இந்த சூழ்சசியை முன்னெடுக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)


**காணி விற்பனைக்கு**

யாழ்.மாநகர சபை 16-ம் வட்டார எல்லைக்குள் கந்தர்மடம் பலாலி வீதிக்கு அருகாமையில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-0758496213** (7473)

**Chemistry (A/L)**

1979-2014 வினாத் தாள் சிறப்பாக கற்பிக்கப்படும்

**தொடர்பு:-0213219303** (7485)

**FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH**

FALC

**FRENCH CLASSES**

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சான்றிதழ்களை France, Canada, Belgium, Swiss செல்வோர் மற்றும் வெளிநாட்டில் படிக்க விரும்புவோர், வேலை செய்யவுள்ளோர் வடக்கில் எம்மிடம் மட்டுமே Easyway இல் French கற்றுக் கொள்ள முடியும்

**ஏன் எம்மிடம் அதிகமானோர் French கற்கிறார்கள்?**

Speaking, Listening, Reading & Writing இல் தனி தனி கவனம்...
Teaching materials அனைத்துமே France இல் இருந்து பெறப்பட்டது...
சர்வதேச தரத்தில் French வகுப்புக்களை வழங்குதல்....
ஒரு வகுப்பிற்கு 10 பேரை அனுமதித்து தனிப்பட்ட கவனம் செலுத்தல்...
எம்மிடம் கற்றோர் France மற்றும் Canada இல் வேலை செய்கிறார்கள்...

ஆசிரியர்:MR.V.JEGAN (Trained teacher in France-2007, university இல் French விரிவுரைகளை மேற்கொள்பவரும், 2006 ஆம் ஆண்டிலிருந்து யாழில் French கற்பிக்கும் ஒரே ஆசிரியர்...)

836க்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்.

**சர்வதேச French Diplomaக்கள் மற்றும் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.** (C-8265)

ஆரம்பம்:-01.09.2014 திங்கள் 09.30A.M
No. 40, Palaly Road, Jaffna (ஆரியகுளம்)

ஆரம்பம்:-03.09.2014 புதன் 4.30 P.M
No.181, 1st Floor Main Street, நெல்லியடி.

T:P:-021 320 2973, 0779789456

**Inter Lock Paving Stone**



நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு

உறுதியான பல வடிவங்களில் கறுப்பு, சிவப்பு, வெள்ளை நிற நிலப்பதிப்புக் கற்களை (Inter Lock) எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0773818799
உங்கள் இருப்பிடத்திற்கு இறக்கித்தரப்படும்



Special Discounts for Engineers

**பிரணவன் என்ரபிறைசஸ்**
635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (C-8266)

**நல்லூரரான் அருள் பரவட்டும் அகிலமெலாம்**

உங்கள் அபிமான புதிய தலைமுறை ஐஸ்கிறீம் நிறுவனமாகிய

**SYLO ICE CREAM**
(Sweet your Life orbit)

நல்லூர் முன் பருத்தித்துறை வீதியில் இல. 521 C கட்டடத்தில் விழாக்கால விற்பனை நிலையத்தை அமைத்துள்ளது.

நம்பகமான Pasterzed மற்றும் Homeginezed முறைப்படி 100% சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் பல வகை ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழுங்கள்.



521 C, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

இல. 76, அம்மன் வீதி, கொக்குவில். 021-4926003 (7207)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன் எங்கள் சேவை
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள் உட்பட அனைத்துப்பொருட்களையும்
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள் உங்கள் உறவுப்பாலம் நாங்களே!



வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம் (C-8264)

**அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்** இல.10 புதிய மாநகரசபை கட்டிடத்தொகுதி கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 0212223536

உலகத் தமிழர்களின் உச்ச நிறுவனம்

**ரமி இசைத்தட்டின் மாபெரும் மலிவு விற்பனை**

ராஜா நகரில் வீற்றிருக்கும் நல்லூர் கந்தசாமி கந்தனின் மஹா உற்சவ திருநாளை முன்னிட்டு சுவிசில் இருந்து மூன்று இடங்களில் முகாமிட்டு நடத்தி வருகிறோம்.

இலங்கையில் உள்ள அத்தனை தமிழ் மக்களும் எதிர்பார்க்காத விலையில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம். அனைத்தும் ஒரிஜினல் சிடிக்கள். கம்யூட்டர் பதிவுகள் அல்ல என்பதை மக்கள் அறிய வேண்டும்.

Contact: KANTHAN 0779704753




கொடியேற்றத்திலிருந்து 01.08.2014 மலிவு விற்பனை ஆரம்பம் இதனை தொடர்ந்து துர்க்கை அம்மன் (சப்பறம், தேர், தீர்த்தம்) சன்னதி முருகன் (6ம் நாளிலிருந்து தீர்த்தம் வரை), வல்லிபுரம் ஆழ்வார் (சப்பறம், தேர், தீர்த்தம்) உற்சவ நாட்களிலும் எமது மலிவு விற்பனை.

30 ரூபாயிலிருந்து விலை ஆரம்பம்

விற்பனை நடைபெறும் இடம் : கோவில் வீதி, 231 நல்லூர் யாழ்அருவி (கவீஸ் மினரல் வாட்டர் கம்பெனி)

விற்பனை நடைபெறும் இடம் : லிங்கம், ரியோ கூல்பார் (நடுவே அமைந்துள்ளது) (7220)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014


E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்
E.S.P Nagaratnam & Co

அமெரிக்கன் தண்ணீர்

மொத்தமாகவும் சில்லறையாகவும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள முடியும்

52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 3096
021 221 7277

அமெரிக்கன் குடிநீருக்கான யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்



நல்லூர் முருகா உன் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்.

ஜீவாகாரம்

குழந்தைகள் முதல்
முதியோர்வரை பாவிக்க
உகந்த சத்துணவு




Anna Coffee

100% Pure Ground Coffee




Superbly Blended & Roasted to a Strict Formula....

எமது புதிய தயாரிப்புக்கள்....




அண்ணா தொழிலகம் - இணுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063



கோபுரம் சவுண்ட்ஸ்

இல.38, மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

AHUJA

TOA SENNHEISER SHURE inter M D.A.S. AHUJA BOSS





தேரேறிவரும்
நல்லைக் கந்தனுக்கு அரோஹரா


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014

"சைவமும் தமிழும் தழைக்க தேரேறும் நல்லூரான் அடிபணிவோம்"




## Sylo Ice Cream

## ஷைலோ ஐஸ் கிறீம்

"Sweet Your Life orbit"

"உங்கள் வாழ்க்கை வட்டத்தில் இனிப்பு"

அதி நவீன இயந்திரங்கள் மூலம் Pasterized மற்றும்
Homegilezed முறையில் சுவையுடன் பால்,வெண்ணெய்,
பாதாம், பிஸ்தா, முந்திரி, தேன், அத்திப்பழம் போன்ற
இயற்கையான நற்குணங்கள் நிறைந்த பொருட்களுடன்
எமது மக்களின் ஆரோக்கியத்தின் தேவையறிந்து
உற்பத்தி செய்யப்படும் எமது ஐஸ்கிறீம் வகைகளை
சுவைத்து எமக்கு ஆதரவு தாருங்கள்.

விரைவில் Sylo Health Care
Food Centre...
ஷைலோ ஆரோக்கிய
உணவகம்

No.76,அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P:-021 4926003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா
சிறப்புமலர்-24.08.2014


# பொபி பத்திகள்

பக்தனுக்கும் பகவானுக்கும்
பாலமாய் அமைவது பொபி பத்திகள்






70/=

பொபி B-20 பத்திகள்
1 பெக்கட்டில் 3 வாசனை



100/=

பொபி ரோஜா மணத்தில்
100 பத்திகள்




50/=

பொபி மல்லிகை மணத்தில்
50 பத்திகள்




20/=

பொபி பிலெட்டினம் பத்திகள்




30/=

பொபி குரு பத்திகள்

**BOBBY OVER SEAS**
177,balagolla kengalla.
Tel : 081 3836647

36 வருட தேசிய அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-24.08.2014

# Kiruba Learners

# கிருபா லேணர்ஸ்



**அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை**


Regd No. DS/ 589, Kiruba Learners, Govt. Approved A Grade Driving Training School



- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.



**இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**TP: 021 222 4353, 021 492 3200, 077 722 5292**



**பருத்தித்துறை,**
021 492 3201
071 454 6958

**சாவகச்சேரி**
021 492 3202
021 2270700

**சுன்னாகம்**
021 224 2022
071 454 6956

**நெல்லியடி**
021 300 6550
071 454 6957

**கிளிநொச்சி**
021 228 5505
071 454 6955

**விசுவமடு**
021 320 1515
071 454 6955

**வவுனியாவிலும் உதயம்**

இல. 216, A9வீதி, வவுனியா.(வசந்தி தியேட்டருக்கு முன்பாக) (வவுனியாவில் பெண்களுக்கு பெண் பயிற்றுவிப்பாளர்களினால் பயிற்சி வழங்கப்படும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org